பக்கங்கள்:-27

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 01 | செவ்வாய்க்கிழமை | 14.01.2025 | அதிர்வு 165






# தடைகளைத் தகர்த்தெறிந்து துணிச்சலுடன் வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீருவோம்

## தைத்திருநாளில் ஜனாதிபதி அநுர சபதம்

“நாட்டுக்கும் மக்களுக்கும் பல நல்ல விடயங்களை நிறைவேற்ற உறுதிபூண்டு நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாங்கள், அந்த வாக்குறுதிகளைத் தடைகளுக்கு மத்தியிலும் பின்வாங்காத துணிச்சலுடனும் அசைக்க முடியாத உறுதியுடனும் நிறைவேற்ற திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.”

- இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். 05▶

# புதுக்குடியிருப்பில் மாயமான இளைஞர் வீட்டுக் கிணற்றில் இருந்து சடலமாக மீட்பு





முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு – சுதந்திரபுரம் பகுதியில் வீட்டுக் கிணற்றில் மிதந்த நிலையில் நேற்று மாலை இளைஞரின் சடலம் 05▶

# ரயிலின் முன் பாய்ந்து இளைஞர் உயிர்மாய்ப்பு

## தென்மராட்சியில் சம்பவம்



யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற கடுகதி ரயிலின் முன் பாய்ந்து இளைஞர் ஒருவர் 05▶




சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழர் அயலவர் மாநாட்டில் பங்கு பற்றுவதற்காகக் கடந்த வாரம் கொழும்பிலிருந்து புறப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவர் சிறிதரன் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தடுக்கப்பட்டு, சில மணி நேரம் குடையப்பட்ட பின்னர் தொடர்ந்து பயணிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

அவரைத் தடுத்து இந்தக் குழப்பம் பண்ணியமைக்கான சரியான விளக்கங்களை பாதுகாப்புத் தரப்பினர் அவரிடம் கூட தெரிவிக்கவில்லை. எதற்காக அவர் இந்தியா செல்கின்றார் என்ற விடயம் மாத்திரம் அவரிடம் துருவித் துருவி கேட்கப்பட்டதாக அறிய வருகிறது.

இந்த விடயத்தில் பாதுகாப்பு தரப்பினர் எதற்காக இந்தக் குடைச்சலை அவருக்குச் செய்தார்கள் என்பது பற்றிய உத்தியோகபூர்வ தகவல்கள் எதுவும் இதுவரை வெளிப்படாவிட்டாலும் அரசல் புரசலாக சில விடயங்கள் வெளியே வந்திருக்கின்றன. கசிந்திருக்கின்றன. 05▶

# திருமலையில் 18ஆம் திகதி கூடுகின்றது தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் தலைமையில் நடைபெறவுள்ளது.

திருகோணமலையில் உள்ள சிவில் அமைப்பொன்றின் கேட்போர் கூடத்தில் குறித்த தினமன்று காலை 10 மணிக்குக் கூட்டம் ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கூட்டத்தின்போது கட்சிக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு, கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றிய பார்வை, மட்டக்களப்பில் நடைபெறவுள்ள மாநாடு உள்ளிட்ட விடயங்கள் பற்றி ஆராயப்படவுள்ளதோடு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

இதேநேரம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முன்னெடுத்து வரும் புதிய அரசமைப்பு விடயத்தைத் தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டாகக் கையாளுதல் விடயத்தில் தமிழரசுக் கட்சியின் வகிபாகம் தொடர்பிலும் தீர்மானம் எடுக்கப்படலாம் என்று அக்கட்சியின் நம்பிக்கைக்குரிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



# வடமராட்சி கிழக்கில் கரையொதுங்கிய கண்ணனும் ராதையும்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். வடமராட்சி கிழக்கு, வத்திராயன் கடற்கரைப் பகுதியில் கண்ணன், ராதை ஆகிய இருவரும் இணைந்த மரச்செதுக்கல் சிலை ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

மட்டி பொறுக்குவதற்காக வத்திராயன் வடக்கு கடற்கரைக்கு மீனவர்கள் சிலர் சென்றிருந்த வேளை ஆள் உருவில் உருவம் ஒன்று காணப்பட்டுள்ளது.

அதனை மீட்டபோது குறித்த உருவம் மரத்தில் செதுக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்ட கண்ணன் – ராதா சிற்பமாகக் காட்சியளித்துள்ளது.

இந்தச் சிற்பம் இந்தோனேசியா, மியான்மார், இந்தியா ஆகிய நடொன்றில் இருந்து வந்திருக்கலாம் என அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.



# அமைச்சர்கள் ஐவர் நியமனம்

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனாவிற்குப் பயணமாகியுள்ள நிலையில் 5 அமைச்சுகளுக்குப் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு இதனை அறிவித்துள்ளது.

ஜனாதிபதியின் கீழ் உள்ள மூன்று அமைச்சுக்களான டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய 3 அமைச்சுக்களுக்கும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு என்பவற்றுக்குப் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, டிஜிட்டல் பொருளாதார பதில் அமைச்சராக டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் பொறியியலாளர் எரங்க வீரரத்னவும், பாதுகாப்பு பதில் அமைச்சராக பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகரவும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பதில் அமைச்சராக நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெருமவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சராக வெளிவிவகார பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரவும், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் , துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து பதில் அமைச்சராக வைத்தியர் பிரசன்ன குமார குணசேனவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# மாகாண மட்டத்தில் குற்ற விசாரணை பிரிவுகளை நிறுவ நடவடிக்கை: அமைச்சர் ஆனந்த விஜேபால



மாகாண மட்டத்தில் குற்ற விசாரணை பிரிவுகளை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

தற்போது காணப்படும் பொலிஸ் நிலையங்களுக்கு மேலதிகமாக இந்த பிரிவுகளை நிறுவுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது தென் மாகாணத்தில் இத்தகைய பிரிவு செயற்பட்டுவருவதாக ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

விசாரணைகளை முறைமைப்படுத்துவதே இதன் நோக்கமாகும் என அமைச்சர் ஆனந்த விஜேபால சுட்டிக்காட்டினார்.

சில விசாரணைகளை நேரடியாக பொலிஸ் மாஅதிபரின் கண்காணிப்பின் கீழ் முன்னெடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.













# திருகோணமலையில் பொங்கல் நிகழ்வு

சுவிட்சர்லாந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள் மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தின் ஏற்பாட்டில் திருகோணமலையில் சக்திப்பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வு திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சக்தி சரவணபவ ஆனந்தம் திருச்செந்தூரன் தலைமையில் திருகோணமலை செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது, திருகோணமலை மாவட்டத்தின் அன்பு வழிபுரம், வரோதயநகர், செல்வநாயகபுரம், உதயபுரி ஆகிய பிரதேசங்களை சேர்ந்த 50 வறிய குடும்பங்களுக்கு பானை உள்ளிட்ட பொங்கல் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதற்கான, நிதி அனுசரணையை மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு பேர்ன் மன்ற சக்திகள் திரு. திருமதி கந்தையா சிவலோஜினி குடும்பத்தினர் வழங்கியிருந்தனர்.

அறப்பணி மையத்தின் நிறுவனர் சக்தி சுவிஸ் சுரேஷ் சகோதரரின் நேரடி கண்காணிப்பில் இடம்பெற்ற நிகழ்வில், அறப்பணியாளர்கள், பிரதேச மக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.










## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அண்மையில் சிறீதரன் எம்.பியும் திருகோணமலை மாவட்டத்தின் குகதாசன் எம்.பியும் கனடாவுக்குச் சென்றிருந்தனர்.

கனடாவில் இருந்து திரும்பிய பின்னர், இலங்கைத் தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சமஷ்டி பற்றிய சில விடயங்களை விளக்குவதற்கான கலந்துரையாடல் என்ற பெயரில் கனடா கல்கரி பல்கலைக்கழக கல்வியாளர்கள் சிலருடனான சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தியாவில் நடத்தத் திட்டமிடப்பட்ட இந்த நிகழ்வுக்கான முன் முயற்சிகள் மற்றும் ஏற்பாடுகளை குகதாசன் எம்.பி. முன்னெடுத்தார் எனத் தெரிகிறது.

ஆனால் இந்தக் கலந்துரையாடலின் பின்னால் கனடாத் ஈழத் தமிழர்களின் தேசிய கவுன்ஸில் என்ற பெயரிலான அமைப்பு போன்ற ஒன்றின் பின்புலம் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதாக இலங்கைப் புலனாய்வு தரப்புகள் மணந்து பிடித்தன என்று கூறப்படுகின்றது.

இலங்கையிலும் இந்தியாவிலும் தடை செய்யப்பட்ட கனடிய அமைப்பு ஒன்றின் பின்னணியுடன் நடைபெறும் மாநாட்டுக்கான ஏற்பாட்டில் தமிழ் எம்.பிக்கள் பங்குபற்றுவது குறித்த எச்சரிக்கைத் தகவல் நேரத்துடனேயே இலங்கைப் பாதுகாப்பு தரப்புக்கு கிட்டியிருந்தமையால் அது பற்றிய எச்சரிக்கையோடு கட்டுநாயக்கா விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் உஷார் படுத்தப்பட்டிருந்தனர் எனவும் கூறப்படுகின்றது.

இந்தப் பின்புலத்திலேயே சிறீதரனைக் குடைந்தெடுக்கும் நடவடிக்கையில் பாதுகாப்புத் தரப்பினர் ஈடுபட்டனர். எனினும் சென்னையில் தமிழக அரசின் ஏற்பாட்டில் நடைபெறும் வேறொரு நிகழ்வில் பங்குபற்றவே சிறிதரன் அங்கு செல்கின்றார் என்ற தகவல் நேரடியாக ஹக்கீம் எம்.பி. மூலம் உறுதிப்படுத்தப்பட்டமையை அடுத்து சிறிதரன் தொடர்ந்து மேற்கொண்டு பயணிக்க அனுமதிக்கப்பட்டார் எனத் தெரிகிறது.

கனடா அமைப்பு ஒன்றின் ஏற்பாட்டில் நடைபெறும் கலந்துரையாடல் போன்றவற்றில் தமிழ் எம்.பிக்கள் பங்குபற்றும் விடயத்தில் அநுரா அரசு தீவிர கண் கொண்டு நோக்குவதாகத் தெரிகின்றது.

---

## ரயிலின் முன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிர்மாய்த்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை மதியம் 2.30 மணியளவில் மீசாலை கமநல சேவைகள் திணைக்களத்துக்கு முன்பாக உள்ள ரயில் பாதையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கொடிகாமத்தைச் சேர்ந்த 19 வயதான நவரத்தினம் நவாஸ்கரன் எனும் இளைஞரே இவ்வாறு உயிர்மாய்த்துள்ளார்.

இந்த இளைஞர் இரண்டு மாதங்களுக்கு முன்னர் திருமண பந்தத்தில் இணைந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வு




நாட்டில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 2,045 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர் என அந்த பிரிவு குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் கடந்த வருடத்தில் மாத்திரம் 49,877 டெங்கு நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டனர்.

அத்துடன் 24 உயிரிழப்புகள் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தடைகளைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

அவர் விடுத்துள்ள தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துச் செய்தியிலேயே மேற்படி விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

“அறுவடைத் திருநாள்” என்று பொருள்படும் தைப்பொங்கல் உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் மற்றும் இந்துக்களால் மிகுந்த பக்தியுடன் கொண்டாடப்படுகின்றது.

நிறைவான அறுவடைக்குப் பங்களித்த சூரியன், பூமி, மழை மற்றும் பசுக்கள், உபகரணங்களுக்கு நன்றி செலுத்துவது இந்த நாளின் சிறப்பம்சமாகும்.

இந்த விழா ‘தை’மாதத்தின் முதல் நாளில் கொண்டாடப்படுகின்றது. சூரியனின் வடக்கு நோக்கிச் செல்லும் “உத்தராயணம்” தைப்பொங்கல் நாளில் தொடங்குகின்றது. புதிய திசையை நோக்கிச் செல்லல், மனித சமூகத்தின் உள்ளக – வெளிப்புற சகவாழ்வு என்பனவே தைப்பொங்கல் பண்டிகையின் அர்த்தமாகும்.

இந்த நாட்டு மக்களின் நற்பண்புகள், நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு என்பவற்றை மேம்படுத்தி சமூக மாற்றத்துக்கான ஆரம்ப முயற்சியாகவும், சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறைக்கான புதிய ஒரு திசையின் தொடக்கமாக “கிளீன் ஸ்ரீலங்கா” திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமயத்தில், தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுவது மகிழ்ச்சியளிக்கின்றது.

வரலாற்று ரீதியாக வேரூன்றிய ஆசிய மரபுகளில் மனிதனுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையிலான பிணைப்பு பிரிக்க முடியாதது. தைப்பொங்கல் தினத்தால் வெளிப்படுத்தப்படும் அந்த மரபுகள் இந்தத் திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

அதேபோல், தைப்பொங்கல் கொண்டாட்டம் மக்களின் கலாசார வாழ்வில் புதிய நம்பிக்கைகளைக் கட்டியெழுப்புகின்றது. நாட்டில் உருவாகியுள்ள புதிய உத்வேகத்துடன், இலங்கையர்களாகிய நம் அனைவருக்கும், “அழகான வாழ்க்கை” என்ற நம்பிக்கையை நம் இதயங்களில் சுமந்து, புத்தாண்டில் புதிய உற்சாகத்துடன் முன்னோக்கிக்கொண்டு செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அதற்காக சுற்றுச்சூழல் முன்னேற்றத்துக்கு உகந்த முன்னுரிமை அளிக்கும் ஒரு புதிய கலாசார நெறிமுறை இருப்பை உருவாக்குவதன் மூலம் நிலையான அமைதி, நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் தலைமைப் பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறலை நாங்கள் ஏற்கின்றோம்.

நாட்டுக்கும் மக்களுக்கும் பல நல்ல விடயங்களை நிறைவேற்ற உறுதிபூண்டு நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட நாங்கள், அந்த வாக்குறுதிகளைத் தடைகளுக்கு மத்தியிலும் பின்வாங்காத துணிச்சலுடனும் அசைக்க முடியாத உறுதியுடனும் நிறைவேற்ற திடசங்கற்பம் பூண்டுள்ளோம்.

இந்த நாட்டு மக்களின் முகங்களில் நீடித்த புன்னகையைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட இந்தச் செயற்பாட்டில், புதிய அணுகுமுறைகளுடன், ஒற்றுமையுடனும் பங்கேற்புடனும் ஒன்றிணைய உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

சுபமான ஆரம்பத்துக்கு இந்தப் பொங்கல் கொண்டாட்டம் பாரிய ஆசீர்வாதமாக அமைய வேண்டும் என்று நான் பிரார்த்திக்கின்றேன்.

இலங்கை மற்றும் உலகளாவிய இந்து பக்தர்கள் அனைவருக்கும் நல்லிணக்கம் மற்றும் நன்றியுணர்வு நிறைந்த, வளமான மற்றும் மகிழ்ச்சியான தைப்பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்! – என்றுள்ளது.

---

## புதுக்குடியிருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீட்கப்பட்டுள்ளது.

சுதந்திரபுரம் கிராமத்தைச் சேர்ந்த, 28 வயதான பிலிப்குமார் டினோஜன், கடந்த 11 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார்.

அதன் பின்னர், அவரைத் தேடும் பணியில் உறவினர்கள் ஈடுபட்டபோதும், அவர் கண்டுபிடிக்கப்படவில்லை.

இந்தநிலையில் நேற்று மாலை மேற்படி இளைஞரின் வீட்டுக் கிணற்றில் சடலம் மிதந்த நிலையில் மீட்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



அனைவருக்கும் இனிய
தைத்திருநாள்
நல்வாழ்த்துகள்
Ruhbins Hospital
RUHBINS HOSPITAL (PVT) LTD
No 160 Pointpedro Road, Nelliady,Jaffna
Hotline +94773123456




# யாழில் பால்ச்சாலைகளில் நீண்ட வரிசை

**(ந.லோகதயாளன்)**

தைப்பொங்கலை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் நேற்று பால்ச்சாலைகளில் நீண்ட வரிசை காணப்பட்டது.

இன்று பொங்கல் பயன்பாட்டுக்குப் பாலை வேண்டுவதற்காகவே நீண்ட வரிசை காணப்பட்டது.

யாழ். குடாநாட்டில் மட்டும் 55 ஆயிரம் கறவைப் பசுக்கள் உள்ளதோடு நாளாந்தம் ஒரு இலட்சத்து 15 ஆயிரம் லீற்றர் பால் உற்பத்தி செய்யப்படுகின்றது எனக் கால்நடைத் திணைக்களம் கூறுகின்றபோதும் பாலைப் பெறுவதில் நெருக்கடி நிலையே தொடர்கின்றது.




# 05 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீடிப்பு



நாட்டில் 05 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

தேசியகட்டிடஆராய்ச்சிநிறுவனம்இதனைஅறிவித்துள்ளது.

இதன்படி பதுளை, நுவரெலியா, குருணாகல், கண்டி மற்றும் மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மகிழ்ச்சிப் பொங்கல் எப்போது?

இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள் இந்துக்கள். அதுவும் தமிழர்களின் வாழ்வியல் முறைகளே இயற்கையோடு பின்னிப் பிணைந்து நிற்பவைதான்.

அவ்வாறு அவர்கள் இயற்கைக்கு இயைந்து கொண்டாடும் ஒரு திருநாள் தான் தைப் பொங்கல்.

தமிழர்களின் பண்பாட்டு விழாவான பொங்கல் திருவிழா, தமிழரின் வாழ்வியலோடு, குறிப்பாக உழவுத் தொழில் செய்து வரும் சமூகத்தோடு இணைந்த நன்றி தெரிவிக்கும் விழாவாகும்.

உழவர்கள் தமது உழைப்பிற்கும் தங்களுக்கு உதவிய இயற்கை மற்றும் கால் நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் வகையில் இந்தத் திருநாளைக் கொண்டாடி வருகின்றனர்.

பயிர்த்தொழில் செய்பவர்களின் வாழ்வின் உற்பத்தி சார்ந்த இந்த விழா மத உணர்வும், இன உணர்வும் கடந்து பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பாட்டின் வெளிப்பாடாகவே கொண்டாடப் பட்டு வருகின்றது.

தமிழர்கள் எண்ணற்ற விழாக்களை கொண்டாடி மகிழ்ந்தாலும் அவற்றில் மிகவும் முக்கியமான விழாவாக கொண்டாடப்படுவது தமிழர் திருநாள் என்று அழைக்கப்படும் இந்தப் பொங்கல் திருநாள்தான்.

இப்பண்டிகை தமிழ் கலாச்சாரத்தை உலகிற்கு உணர்த்தும் திருநாளாகும். வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தமிழர்கள் அந்த வேளாண்மைக்கு வழி செய்யும் தம் இறைவனான சூரியனுக்கு நன்றி செலுத்தும் விதமாக இத்திருநாளைக் கொண்டாடுகின்றனர்.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர்' என்ற பெருமைக்கு ஏற்ப நாம் அனைவரும் வாழ்வதற்குத் தேவையான சூரியனையும் உழவுக்குத் துணை புரியும் மாடுகளையும் சிறப்பிக்கவே தமிழர்கள் பொங்கலைத் திருநாளாகக் கொண்டாடுகின்றார்கள்.

அவனின்றி அணுவும் அசையாது என்பர். உலக இயக்கத்திற்குக் காரணன் உதயனே. அவனே சக்தியின் மூலவளம். உலக இயக்கத்துக்குத் தேவையான சக்தியைவாரிவழங்கும்வள்ளல்அவனே. சூரியக் கடவுள் வழங்கும் சக்தியை உலகில் பதிப்பவை பச்சைத் தாவரங்கள். அரிசியை தன் பிரதான உணாவாகக் கொண்ட தமிழன் அந்த நெல்லரிசியை இயற்கை வாரி வழங்கும் அறுவடைக் காலத்தில் அந்த சக்தியை பொய்க்காமல் தந்த ஆதவனுக்கு பொங்கலிட்டு நன்றி தெரிவிக்கும் நன்றித் திருவிழாவே இப் பொங்கல்.

வேளாண்மைக்கு உறுதுணையாக இருக்கும் விலங்குகள் மற்றும் கால் நடைகளுக்கு நன்றி கூறும் விழா நாளை வரும் மாட்டுப்பொங்கல் ஆகும். குறிப்பாக இந்நாளில் விவசாயத்திற்கு உறுதுணையாக இருக்கும் காளை மாட்டிற்கும், இல்லத்தைச் செழிப்புறச் செய்யும் பசு மாட்டிற்கும் பொங்கலிடும் நாளாகும்.

தமிழர் வாழ்வியலில் மகிழ்ச்சி தரும் கொண்டாட்டத் திருவிழாவாக பொங்கல் அமைந்தாலும், அது வருடந்தோறும் வந்து சென்றாலும், ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் மகிழ்வோடு கொண்டாடும் பொங்கல் இன்னும் வரவில்லை என்பதுதான் உண்மை. யதார்த்த நிலைமை.

75 ஆண்டுகளுக்கு மேலாக ஈழத் தமிழினத்தை ஆட்டிப்படைக்கும் இனப் பிரச்சினைக்கு நீதி, நியாமான தீர்வு ஒன்று கிட்டும் நாள்தான் அவர்களுக்கு உண்மையான பொங்கல் திருநாள்.

இந்தப் பொங்கலுக்கு தீர்வு, அடுத்த பொங்கலுக்குள் தீர்வு என்று தமிழர்கள் காலங்காலமாக காத்திருக்கின்றார்கள். 'தை பிறந்தால் வழி பிறக்கும்'என்றநம்பிக்கையுடன்ஒவ்வொரு தைத்திங்களையும் ஆவலோடு அவர்கள் எதிர்பார்த்து ஏங்கி நிற்கின்றார்கள். இன்றும் ஒரு தைத்திங்கள் பிறக்கின்றது.

இந்தத் தைத்திங்களிலாவது அவர்களது தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழி பிறக்குமா? அப்படிப் பிறந்தால்தான் அவர்கள் வீடுகளில் பொங்கும் பொங்கல் பானையின் மகிழ்ச்சி உண்மையானதாக - திருப்தி தருவதாக - போற்றத் தகுந்ததாக - அமையும்.







# ஹேனமுல்ல தொடர்மாடி குடியிருப்பில் தைப்பொங்கல் கொண்டாட்டம்

உலகமெங்கும் வாழும் தமிழர்கள் கொண்டாடும் தைத் திருநாளானது இம்முறையும் கொழும்பில் மிக விமரிசையாக நடைபெற்றது.

அனைத்து இன மதத்தவர்களும் செறிந்து வாழும் கொழும்பு 15 – மாதம்பிட்டிய ஹேனமுல்ல தொடர்மாடி குடியிருப்பு பகுதியில் அனைத்து இன மக்களின் ஒத்துழைப்புடனும் பிரதேச வாசிகளால் தைப் பொங்கல் விழா மிக விமரிசையாக நடைபெற்றது.

இதன்போது பிரதேச மக்கள் ஒன்றாக பொங்கல் பொங்கியதுடன் சிறுவர்களின் நடன நிகழ்வும், பெண்களின் தைப்பொங்கல் சிறப்பு கோலப்போட்டிகளும் நடைபெற்றது.

நிகழ்வில் பங்களிப்பு செய்த அனைவருக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

கொழும்பு ஐ.டி.எம். நேசன் கெம்பஸ் மற்றும் ஜனனம் அறக்கட்டளையின் தலைவரும் பிரபல சமூக சேவையாளருமான கலாநிதி விநாயகமூர்த்தி ஜனகனின் அனுசரணையில் நடைபெற்றதுடன் இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக கொழும்பு 15 மாதம்பிட்டிய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நளின் சிரந்தவும் கலந்து கொண்டார்.











# டேவிட் லிகோரி காலமானார்!



ஈழத்துப் பதிப்புத் துறைக்குக் காத்திரமான பங்களிப்பை வழங்கிய டேவிட் லிகோரி உடல்நலக் குறைவு காரணமாக நேற்று காலமானார்.

பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டு அச்சுப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு

நிலவிய 1990களில் மீரா வெளியீடாக 28 வரையான நூல்களை இவர் வெளியிட்டுள்ளார்.

கோடிட்ட அப்பியாசப் புத்தகத் தாள்களில் அச்சிடப்பட்டு, மர புளொக்கில் பதிக்கப்பட்ட அட்டையுடன் இந்நூல்களை அவர் பதிப்பித்து சைக்கிளில் சென்று விநியோகித்து வந்துள்ளார்.

போர்க்கால வாழ்வியலைப் பிரதிபலிக்கும் நாவல்களை தனது சொந்தச் செலவில் பதிப்பித்த வகையில் இவரது பணி முக்கியத்துவம் வாய்ந்தது.

செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், து.வைத்திலிங்கம், தாமரைச்செல்வி, கே.எஸ். ஆனந்தன், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், கே.ஆர்.டேவிட், இயல்வாணன், பொன்.கணேசமூர்த்தி, வளவை வளவன், ஓ.கே.குண நாதன், வாமதேவன், முருகு, இந்திரா பிரியதர்சினி முதலியோரின் சமகால நாவல்களை இவர் வெளியிட்டுள்ளார்.

பொருளாதாரப் பலமற்ற எளிமையான வாழ்க்கை வாழ்ந்த போதிலும் அவர் சமூக அக்கறையுடன் செய்த சேவை முக்கியமானது.

# தொண்டைமானாறில் பொங்கல் பொதிகள்











யாழ். வடமராட்சி, தொண்டைமானாறு பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் 50 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்தப் பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன.

இதில் யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் சாய்முரளி, பருத்தித்துறை பிரதேச செயலர் திரு.சி. சத்தியசீலன், கிராம உத்தியோகத்தர் பா.வைகுந்தன் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

# மக்கள் பிரச்சினைகளுக்காகப் போராடுகின்றவர்கள் இந்த அரசிலும் சி.ஐ.டிக்கு அழைக்கப்படுகின்றனர்!

## போராட்டக்காரர்கள் இந்த அரசாங்கத்தின் காலத்திலும் சிஐடிக்கு

(மன்னார் நிருபர்)

வடக்கு, கிழக்கில் செயற்பாட்டாளர்கள் மீதான பொலிஸ் அடக்குமுறை புதிய அரசாங்கத்தின் கீழும் தொடர்கிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

20 நாள்களுக்கும் மேலாக, முல்லைத்தீவு விமானப்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள - மியன்மாரின் பயங்கரங்களில் இருந்து தப்பி வந்த - ரோஹிங்கியர்களை அவர்களது நாட்டுக்குத் திருப்பி அனுப்ப வேண்டாம் என வலியுறுத்தும் வகையில், போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவில் போராட்டம் ஒன்றை ஏற்பாடு செய்தமைக்காக அரச சார்பற்ற அமைப்பின் செயற்பாட்டாளர் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கடந்த வியாழக்கிழமை (ஜனவரி 9) நடைபெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் மேலதிக தகவல்களை அறிந்துகொள்ள வேண்டியுள்ளதாகவும், அதுத் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகவும் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு வருமாறும் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் இணை ஒருங்கிணைப்பாளர் ஜாட்சன் பிகிராடோவிற்கு, பொலிஸ் அறிவித்தல் படிவம் 265 ஊடாக ஜனவரி 12 ஆம் திகதி விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய எதிர்வரும் ஜனவரி 15ஆம் திகதி காலை 9.00 மணியளவில் கொழும்பு 01 பழைய பொலிஸ் தலைமையகக் கட்டடத்தில் அமைந்துள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவின் வர்த்தகக் கடத்தல் விசாரணைப் பிரிவின் கடல்சார் குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரியை சந்திக்குமாறு அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் எதிர்வரும் 15ஆம் திகதி தான் விசாரணைக்கான சமூகமளிக்க முடியாத நிலைமையில் இருப்பதாகவும், ஆகவே மற்றுமொரு தினத்தை வழங்குமாறும் ஜாட்சன் பிகிராடோ கோரிக்கை விடுத்துள்ளார். இதற்கமைய எதிர்வரும் ஜனவரி 17ஆம் திகதி காலை 10 மணிக்கு முன்னிலையாகுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு விமானப்படை முகாமில்தடுத்துவைக்கப்பட்டுள்ளரோஹிங்கியாக்களை நாடு கடத்தக் கூடாது என கோரி கடந்த ஜனவரி 09 ஆம் திகதி முல்லைத்தீவில் முன்னெடுக்கப்பட்ட




போராட்டத்தில் கொழும்பில் இருந்து முல்லைத்தீவு சென்ற பிரபல மனித உரிமை செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோவும் கலந்துகொண்டார்.

மியன்மாரில் இருந்து தப்பி வந்த ரோஹிங்கியாக்களை மீண்டும் நாட்டிற்கு திருப்பி அனுப்பக்கூடாது என கோரி சிவில் செயற்பாட்டாளர்கள், அரசியல் தலைவர்கள், தொழிற்சங்க தலைவர்கள் உள்ளிட்டவர்கள் 2025 ஜனவரி 10 வெள்ளிக்கிழமை கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியமையோடு ஜனாதிபதி செயலகத்திடம் கடிதமொன்றையும் கையளித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு நவ சமசமாஜக் கட்சியுடன் இணைந்த காணாமல் போனோர் தொடர்பில் தேடியறியும் குழு தலைமைத் தாங்கியது.







# ஏறாவூரில் கிணற்றில் வீழ்ந்து இரண்டு வயது குழந்தை சாவு

(கனகராசா சரவணன்)

இரண்டு வயது பெண் குழந்தை கிணற்றில் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மட்டக்களப்பு ஏறாவூரில் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர் இரண்டாம் பிரிவு மக்காமடி வீதியைச் சோந்த முகமட் ஷரகீர் ஜப்பிரா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது

அந்தப் பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றில் வீட்டிற்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்த குழந்தை கிணற்றுக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த கதிரையில் ஏறி கிணற்றை எட்டிப்பார்க்க முயன்றபோது கிணற்றுக்குள் தவறி வீழ்ந்துள்ளது.

மாலை 6.00 மணியளவில் குழந்தையை காணவில்லை என பெற்றோர் தேடிய போதே கிணற்றுக்குள் குழந்தை வீழ்ந்து கிடப்பது கண்டு பிடிக்கப்பட்டது. உடனடியாக குழந்தையை மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து குழந்தையின் உடல் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. பெற்றோரின் கவனயீனத்தால் குழந்தை உயிரிழந்துள்ளது எனத் தமது ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# டொனால்ட் ட்ரம்ப்பின் பதவியேற்பில் பங்கேற்கிறார் சுப்ரமணியம் ஜெய்சங்கர்

அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப்பின் பதவியேற்பு விழாவில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் பங்கேற்கவுள்ளார்.

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் எதிர்வரும் 20 ஆம் திகதி பதவியேற்கவுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியின் பதவியேற்பு விழாவில் இந்தியா சார்பில் வெளியுறவுத் துறை அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் பங்கேற்கவுள்ளார் என இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சுமார் 80 நாடுகளின் அரச தலைவர்கள் அமெரிக்க ஜனாதிபதியின் பதவியேற்பு விழாவில் பங்கேற்கவுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

# தி.மு.க. அரசுக்கு எதிராக சூறாவளிப் பயணம்; தமிழகம் முழுவதும் செல்கின்றார் பழனிசாமி

தி.மு.க. அரசின் அவலங்களை பொதுமக்களிடம் விளக்க அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி விரைவில் தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் அ.தி.மு.க. தொடர்ந்து வெற்றி கண்ட கட்சி என பெயரை பெற்றுள்ளது. தொடர் தோல்வியை சந்திக்காத கட்சியாகவும் உள்ளது. அ.தி.மு.க.வின் இந்த நிலையை தக்கவைக்க வேண்டிய கட்டாயம் கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமிக்கு ஏற்பட்டுள்ளது.

அதனால், 2026 தேர்தலில் வென்றே ஆகவேண்டிய கட்டாயத்தில் பழனிசாமி பல்வேறு அரசியல் வியூகங்களை வகுத்து வருகிறார்.

அதன் ஒரு பகுதியாக தி.மு.க. ஆட்சியில் நடைபெற்று வரும் கொலை, கொள்ளை சம்பவங்கள், போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், அதில் திமுகவினருக்கு உள்ள தொடர்புகள், குறிப்பாக அண்ணா பல்கலைக்கழக மாணவி



பாலியல் வன்கொடுமை சம்பவம் உள்ளிட்டவை குறித்து பொதுமக்களிடம் விளக்க பழனிசாமி திட்டமிட்டுள்ளார்.

அதற்காக தமிழகம் முழுவதும் 234 தொகுதிகளிலும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றார் என தகவல் வெளியாகியுள்ளது.

இதுதொடர்பாக நடைபெற்ற அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் பழனிசாமி பேசியுள்ளார் எனவும் சுற்றுப்பயணத்துக்கான ஏற்பாடுகளை அந்தந்த மாவட்ட செயலாளர்கள் செய்ய தயாராக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார் என கூறப்படுகிறது.

மேலும், தி.மு.கவை மக்கள் புறக்கணித்துவிட்டார்கள். மக்களை பார்க்க தி.மு.கவினர் அஞ்சுகின்றனர். அதனால் 2026 தேர்தல் நமக்கு சாதகமாகவே இருக்கும். தேர்தலுக்கு இன்னும் 14 மாதங்களே உள்ளன. அதனால் இந்த 14 மாதங்கள் நாம் கடுமையாக உழைத்தாக வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார் என கூறப்படுகிறது.

அதனால், பழனிசாமியின் சூறாவளி சுற்றுப்பயணத்துக்கான பணிகளை மாவட்ட செயலாளர்கள் தொடங்கியுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி அவர் இம்மாத இறுதியில் சுற்றுப்பயணத்தை தொடங்குவார். எங்கிருந்து தொடங்குவது என்பது குறித்து நிர்வாகிகளுடன் பழனிசாமி தொடர்ந்து ஆலோசித்து வருகிறார்.

கோவையில் இருந்து தொடங்க திட்டமிட்டுள்ளார் என ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் நடப்பதால், அங்கு தொடங்குவது சரியாக இருக்குமென்றும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

விரைவில், திகதியும் சுற்றுப்பயணம் தொடங்கும் இடமும் அறிவிக்கப்படும் என்று கட்சி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

# தமிழக மீனவர்கள், படகுகளை மீட்கக் கோரி ஜெய்சங்கருக்கு இராமநாதபுரம் எம்.பி கடிதம்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களையும், மீன்பிடி படகுகளையும் உடனடியாக மீட்க வேண்டும் என வலியுறுத்தி வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு இராமநாதபுரம் எம்.பி. நவாஸ்கனி கடிதம் எழுதி உள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர். இதற்கான நிரந்தர தீர்வை காண வேண்டும் என்பது மீனவர்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது. ஆனால், நிரந்தர தீர்வு காணப்படாமல் மீனவர்கள் கைது செய்யப்படுவதும், அவர்களின் படகுகள் சிறைபிடிக்கப்படுவதால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது.

ஞாயிற்றுக் கிழமை இராமேசுவரத்தைச் சேர்ந்த இரண்டு படகுகளையும், 8 மீனவர்களையும் இலங்கை கடற்படை சிறை பிடித்துள்ளது. கைது செய்யப்பட்ட மீனவர்களையும் அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க



நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி தொடர்ந்து கைது செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழக மீனவர்கள் விஷயத்தில் நிரந்தர தீர்வு காண உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.



# உக்ரைனுக்கு எதிரான போரில் 300 வடகொரிய வீரர்கள் பலி

உக்ரைனுக்கு எதிரான போரில் 300 வடகொரிய வீரர்கள் பலியாகியுள்ளனர். 2,700 பேர் காயமடைந்தும் உள்ளனர் என்ற தகவல் வெளிவந்துள்ளது.

தென்கொரிய நாடாளுமன்ற உறுப்பினரான லீ சியாங்-வீ அன் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் பேசும்போது, வடகொரிய வீரர்களின் மரணம் பற்றிய இந்த தகவலை குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கூறும்போது, ரஷ்யாவுக்கு ஆதரவாக குவிக்கப்பட்ட வடகொரிய வீரர்கள் குர்ஸ்க் பகுதி வரை நீடிக்கப்பட்டு உள்ளனர் என்றார்.

என்.ஐ.எஸ். துறையின் ஆய்வின்படி, நவீன போர் கருவிகளை பற்றிய புரிதல் வடகொரிய வீரர்களுக்கு இல்லை. போதிய அளவுக்கு புரிந்து கொள்ளும் தன்மை இல்லாத அவர்களை ரஷ்யா பயன்படுத்தி கொள்கிறது.

அந்த வகையில், வீரர்கள் இடையே அதிக அளவில் காயங்களும், மரணங்களும் ஏற்படுகின்றன என தெரிய வந்துள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

ஏற்கனவே, ரஷ்ய போரில் 2 வடகொரிய வீரர்களை உக்ரைன் சிறைபிடித்து வைத்துள்ளது. நாங்கள் அவர்களை விடுவிக்க தயாராக இருக்கிறோம் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி கூறியுள்ளார். எனினும், அவர்கள் இருவருக்கு பதிலாக, உக்ரைனிய கைதிகளை விடுவிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்; சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது

ஜப்பானின் கியூஷுவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

தென்மேற்கு ஜப்பானின் கியூஷு பகுதியில் நேற்று 6.9 ரிக்டர் அளவிலான இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக ஐரோப்பிய மத்திய தரைக்கடல் நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் இந்த நிலநடுக்கம் 37 கி.மீ., (23 மைல்) ஆழத்தில் ஏற்பட்டதாக




தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஜப்பான் மக்கள் பீதி அடைந்துள்ளதுடன் நிலநடுக்கம் ஏற்பட்டபோது பதிவான சி.சி.டி.வி காட்சிகள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன.

ஜப்பானில் கடந்த ஆண்டு ஒகஸ்ட் 8 ஆம் திகதி, 6.9 மற்றும் 7.1 ரிக்டர் அளவிலான இரண்டு சக்திவாய்ந்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டன, இது தென்மேற்கு தீவுகளான கியூஷு மற்றும் ஷிகோகுவை உலுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தாலிபான் நிர்வாகம் பெண்களை மனிதர்களாக மதிப்பதில்லை

## மலாலா யூசுப்சாய் கண்டனம்



ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் நிர்வாகம் பெண்களை மனிதர்களாக மதிப்பதில்லை என அமைதிக்கான நோபல் பரிசு வென்ற மலாலா யூசுப்சாய் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தலிபான் நிர்வாகம் பெண்களுக்கு எதிரான அடக்கு முறை கொள்கைகளை அதிக அளவில் பிரயோகிப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இஸ்லாமிய நாடுகளில் பெண் கல்வி குறித்து பாகிஸ்தான் நடத்திய சர்வதேச உச்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இந்த கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த செயல்பாட்டினை முடிவிற்கு கொண்டு வரும் நோக்கில், சர்வதேச முஸ்லிம் தலைவர்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான் நிர்வாகம் பெண்களுக்கு எதிராக பல கொள்கைகளை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தைத்திருநாள் சிறப்பிதழ்





# தைப்பொங்கலும் பாரம்பரியமும்: தமிழ் நாட்டில் ஜல்லிக்கட்டு; ஈழத்தில் மாட்டு வண்டில் சவாரி!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -

தைப்பொங்கல் என்றாலே தமிழ் மக்களின் வாழ்வில் விழாக்கோலம் தோன்றிவிடும். பண்டிகைக் காலமாக அமைந்திடும். தமிழ் மக்களின் வாழ்வில் புது விடியலாக பிறக்கும் தைப் பொங்கல் நாள்களிலேயே, தமிழரின் வீர விளையாட்டுக்களான ஜல்லிக்கட்டு தமிழகத்திலும், மாட்டு வண்டிச் சவாரி ஈழத்திலும் செழிமையாக காலங்காலமாக நடத்தப்படுகிறது.

### ஜல்லிக்கட்டும் மாட்டு வண்டில் சவாரியும்

ஈழத்தில் தமிழர்களுக்கே உரித்தான பாரம்பரியம் மிக்க விளையாட்டுக்களில் ஒன்றாக மாட்டு வண்டில் சவாரி விளங்குகின்றது. அது ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலம் வரையில் சிறந்ததொரு வீர விளையாட்டாகவும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள்வரை அனைவராலும் விரும்பிப் இரசிக்கப்படும் விளையாட்டாகவும் காணப்படுகின்றது.

அதனைப் போலவே தமிழ் நாட்டில் ஏறுதழுவுதல், ஏறுகோள், மாடுபிடித்தல், ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு, பொல்லெருது பிடித்தல் என்று தமிழகத்தின் பல பகுதிகளில் பல பெயர்களில் தமிழர்களின் வீர விளையாட்டாம் ஏறுதழுவுதல் பொங்கல் நாள்களில் சிறப்புடன் காலங்காலமாக நடத்தப்படுகிறது.

### தமிழ் இலக்கியத்தில் ஜல்லிக்கட்டு

பழந்தமிழ் இலக்கியங்களிலும் சிந்துவெளி நாகரிகத்திலும் ஏறுதழுவல் நிகழ்ந்ததற்கான சான்றுகள் பல உள்ளன. ஏறு தழுவுதல் (மஞ்சு விரட்டுதல்) என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் காளையை அடக்கும் வீர விளையாட்டின் பெயராகப் பயின்று வருகிறது. இவ் விளையாட்டு, முல்லை நில மக்களின் திருமணத்துடன் தொடர்புடையதாகப் பண்டைக் காலத்தில் இருந்ததாகவும் அறியப்படுகிறது.

ஏறு தழுவல், மஞ்சு விரட்டு அல்லது ஜல்லிக்கட்டு என்பது தமிழர்களின் மரபுவழி விளையாட்டுகளில் ஒன்றாகும். ஏறு என்பது காளை மாட்டைக் குறிக்கும். மாட்டை ஓடவிட்டு அதை மனிதர்கள் அடக்குவது, அல்லது கொம்பைப் பிடித்து வீழ்த்துவதான விளையாட்டு. தமிழ் நாட்டில் புதுக்கோட்டை மாவட்டம் ஜல்லிக்கட்டின் "சொர்க்க பூமியாக" இன்னும் திகழ்ந்து வருகிறது.

முல்லைநில மக்களின் வீரவிளையாட்டாக இருந்தாலும் தென் தமிழகத்தின் மதுரை மாவட்டம் சார்ந்த பகுதிகளில் இவ்விளையாட்டு இன்றும் ஆர்வமாக நிகழ்த்தப்படுகிறது.

சிந்துவெளி நாகரிக சான்று

கொல்லக்கூடிய காளையைத் தழுவிப் போரிட்டு அடக்குவதால் 'கொல்லேறு தழுவுதல்' என்றும் சிறப்பித்துக் கூறப்படுகிறது. இந்தியத் தலைநகர் புது தில்லி தேசியக் கண்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்ற சிந்துவெளி நாகரிகம் சார்ந்த முத்திரை ஒன்றில் ஒரு காளை உருவமும் அதை அடக்க முயலும் வீரரை அக்காளை தூக்கி எறிவதும் உயிரோட்டமான விதத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

பண்பாட்டுத் திருவிழாவாகவும், மக்களின் சமயம் சார்ந்த திருவிழாவாகவும், இளைஞர்களின் வீர உணர்வை நினைவுகூரும் விழாவாகவும் நடைபெறும் ஏறுதழுவுதல் பற்றி தமிழ் இலக்கியங்களில் பல சான்றுகள் உள்ளன.

சங்க இலக்கியப் பாடல்களில் இடம்பெற்றுள்ள 'ஜல்லிக்கட்டு' என்பது தமிழர்களின் கலாச்சார அடையாளங்களில் ஒன்று. 2000ஆண்டுகள் முன்பாகவே ஏறுதழுவல் வழக்கத்தில் இருந்தது என்று தமிழ் அறிஞர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே

தொடர்ச்சி ▼

தைத்திருநாள் சிறப்பிதழ்



# தைப்பொங்கலும் பாரம்பரியமும்: தமிழ் நாட்டில் ஜல்லிக்கட்டு; ஈழத்தில் மாட்டு வண்டில் சவாரி!

தொடர்ச்சி▲

ஒரு ஒழுங்கு முறைக்குள் வந்து விட்ட இவ் ஏறுதழுவுதல் நிகழ்ச்சி அதற்கும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோற்றம் பெற்றிருக்கவேண்டும்.

குறிஞ்சி நில மக்களும் முல்லைநில மக்களும் தங்கள் நிலங்களில் உள்ள வலிமை வாய்ந்த எருதுகளை ஒன்றுடன் ஒன்று பொரும்படியாகச் செய்து ஆரவாரம் செய்வர். இவ்வெருதுகளின் வெற்றியைத் தங்கள் வெற்றியாக எண்ணி மகிழ்வர்.

இந்தியா ஒரு பன்முக கலாச்சாரம் கொண்ட நாடு. ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒவ்வொரு கலாச்சாரம் உண்டு. அவ்வகையில் தமிழ் நாட்டில் ஜல்லிக்கட்டு என்பது ஜாதி, மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. ஜல்லிக்கட்டு என்பது பொங்கல் தினத்தன்று நடைபெறக்கூடியது. இது சிறந்த விளைச்சலை கொடுத்ததற்காக இயற்கைக்கு நன்றி கூறும் திருவிழா ஆகும்.

## இயற்கைக்கு நன்றி கூறும் திருவிழா

சல்லி என்பது விழாவின் போது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகிற வளையத்தைக் குறிக்கும். புளியங் கம்பால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணியும் வழக்கம் தற்போதும் வழக்கத்தில் உள்ளது.

அதோடு, 50 ஆண்டுகளுக்கு முன்பு புழக்கத்தில் இருந்த 'சல்லிக் காசு' என்னும் இந்திய நாணயங்களைத் துணியில் வைத்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கம் இருந்தது. மாட்டை அணையும் வீரருக்கு அந்தப் பண முடிப்பு சொந்தமாகும். இந்தப் பழக்கம் பிற்காலத்தில் 'சல்லிக்கட்டு' என்று மாறியது. பேச்சு வழக்கில் அது திரிந்து 'ஜல்லிக்கட்டு' ஆனது என்றும் கூறப்படுகிறது.

## தமிழ்நாட்டின் கலாச்சார அடையாளம்

ஜல்லிக்கட்டு விழாவின் பின்னர் பல கோயில்களில் இதனை அடுத்து திருவிழாக்கள் கொண்டாடப்படும் தமிழகத்தின் சமயம் மற்றும் இறை நம்பிக்கை சார்ந்த நிகழ்வும் கூட. ஜல்லிக்கட்டு என்பது வெறும் பொழுதுபோக்கு விளையாட்டு மட்டுமல்ல. அது தமிழ்நாட்டின் கலாச்சார அடையாளமும் கூட.

அதனால்தான் ஒவ்வொரு முறையும் பல வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கலாச்சாரத்தை தெரிந்து கொள்ள நேரடியாக ஜல்லிக்கட்டைக் காண வருகிறார்கள். ஜல்லிக்கட்டு தொடர்பான ஏராளமான சுடுமண் சிற்பங்கள் உள்ளிட்டவையும் தொல்பொருள் ஆய்வுகளில் கிடைத்திருக்கின்றன.

சங்க காலத்து தமிழ் இலக்கியங்களான தொல்காப்பியம், கலித்தொகை உள்ளிட்டவற்றில் ஏறு தழுவுதல் என்ற பெயரில் ஜல்லிக்கட்டின் முழு விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளதை காணலாம்.

பல பல்கலைக்கழக ஆய்வுகளும், தமிழ்நாடு மாநிலத்தின் கலாச்சார அடையாளம் ஜல்லிக்கட்டு என்பதை நிரூபித்துள்ளது. புகழ்பெற்ற வரலாற்று ஆய்வாளரான ரோமீலா தாபர், தனது புத்தகத்தில் ஒரு இனத்தின் கலாச்சார தொடர்புகள் குறித்து தெளிவாக வரையறுத்துள்ளார். அவை அத்தனையும் தமிழ்நாட்டு ஜல்லிக்கட்டுக்கு பொருந்தி செல்கிறது.

## ஏறுதழுவுதலும் ஜல்லிக்கட்டும்

ஏறு தழுவுவதற்கும் சல்லிக்கட்டுக்கும் சில வேறுபாடுகளே உள்ளன. முல்லை நிலத்து மக்களிடத்தில் மட்டுமே ஏறுதழுவுதல் இடம்பெற்றது. தற்போது சல்லிக்கட்டில் ஆயர் மட்டுமின்றிப் பல திறத்தவரும் பங்கேற்

தொடர்ச்சி▼

தைத்திருநாள் சிறப்பிதழ்

# தைப்பொங்கலும் பாரம்பரியமும்: தமிழ் நாட்டில் ஜல்லிக்கட்டு; ஈழத்தில் மாட்டு வண்டில் சவாரி!

தொடர்ச்சி▲

கிறார்கள். இருப்பினும் சல்லிக்கட்டில் வென்றவர் பணமுடிப்பைப் பரிசாகப் பெறுதல் ஆயரிடம் பெரும்பான்மையாக உள்ளது.

சல்லிக்கட்டு தைப்பொங்கலுக்கு மறு நாள் மாட்டுப்பொங்கல் நாளன்று விழா போல் கொண்டாடப்படுகிறது. ஏறு தழுவுதல் விழா தெய்வ நம்பிக்கையுடன் தொடர்புடைய தாக இருக்கவில்லை. ஆனால் சல்லிக்கட்டு கிராமிய தேவதைகளின் வழிபாட்டு நம்பிக் கையுடன் தொடர்புடையதாகத் திகழ்கிறது.

அம்மை போன்ற கொடிய நோய்கள் பர விய காலத்திலும், மழையில்லா வரட்சிக் காலங் களிலும், பிள்ளை வரம் கேட்கும் நிலையிலும் வேண்டுதல் நடைபெறும். இக்குறைகள் நீக் கப்பட்டால் பொங்கல் நாளன்று சல்லிக்கட்டு கிறோம் என்பதே வேண்டுகோளாய் அமைகிறது.

**ஐரோப்பிய நாடுகளில் காளைப்போர்**

ஸ்பெயின், போர்த்துக்கல் மேற்குலக நாடு களில் காளைப் போர் முக்கியமான தேசியப் பொழுதுபோக்கு விளையாட்டாக இன்றும் நடைபெறுகிறது. காளைகளை அரங்கத்துக்குள் விரட்டி, ஆத்திரமூட்டிச் சண்டையிட்டுக் கொல் வதே இந்தக் காளைப் போரின் நோக்கம். இம் மேனாட்டுக் காளைப் போரும் சல்லிக்கட்டும் ஒன்று போலத் தோன்றினாலும், இரண்டும் முற்றிலும் வேறுபட்டவை ஆகும்.

தமிழர்களின் வரலாற்றுப் பெருமையை எடுத்துரைக்கும் ஜல்லிக்கட்டு, காலப் பழை மையால் பல்வேறு மாற்றங்களுடனும், சமூக நிலைகளுக்கு ஏற்பவும் இவ்வீர விளையாட்டு நிகழ்த்தப்பட்டாலும் இது தொன்மையானது என்பதிலும், மக்களின் பண்பாடு சார்ந்தது என்பதிலும் ஐயமில்லை. தமிழர்களிடம் எஞ்சியிருக்கும் பண்பாட்டுக் கூறுகளுள் ஒன்றான ஏறுதழுவுதல் அடுத்த தலை முறைக்கும் கொண்டு சேர்க்கப்பட வேண்டும்.

தமிழர்களின் பாரம்பரிய கலாச்சாரத் தையும், பழந்தமிழ் வீர விளையாட்டுக்களையும், தமிழ் பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாப்பது தாயக மக்களின் கடமை மாத்திரமன்றி, புலம்பெயர் தமிழர்களின் பெருங்கடமையும் காலத்தின் கட்டாயமுமாகும்.

# குடும்ப உறவுக்கு உரமிடும் தமிழர் திருநாள் தைப்பொங்கல்!



வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா, காரைதீவு நிருபர்

தை மாதப் பிறப்பை வரவேற்கும் முகமாகவும் விவசாயத்துக்கு உதவ-ிய சூரியன் விவசாயிகள் மற்றும் கால்நடைகளுக்கு நன்றி கூறும் முகமாகவும் தைப்பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது.

குடும்பத்துடன் ஒற்றுமையாக கொண்டாடும் ஒரு பண்டிகையாக தைப்பொங்கல் பண்டிகை திகழ் கின்றது.

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் பெரு விழா இன்று (14) தமிழர் வாழும் பட்டிதொட்டி எல்லாம் நடைபெறுகிறது.

இது ஓர் அறுவடைப் பண்டிகை ஆகும். இந்த விழா தென்னிந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், வட அமெ ரிக்கா, தென் ஆப்பிரிக்கா, மொரிசியசு என தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

உலகமே உணவை நம்பி இருக்கிறது. அதற்கு அடிப்படை விவசாயம் ஆகும். விவசாயத்துக்கு முக்கியமாக விவசாயி தேவை. இரண்டுக்கும் முக்கியமான வன் சூரியன். அந்த சூரியனை நன்றியோடு நினைந்து வழிபடு கின்ற இயற்கை திருவிழா.

உழவு இல்லையேல் உலகில்லை. வள்ளுவரும் அதனை அழகாக கூறியிருக்கின்றார். இயற்கையையே தெய்வமாக வழிபட்டு வந்த முன்னோர் களின் பாரம்பரியம் தற்போது 2025 பொங்கல் பண்டிகைவரை வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது.

விவசாயத்துக்கு ஆதாரமான சூரியன், மழைக்கு அதிபதியான இந்திரதேவன் மற்றும் விவசாயத்துக்கு உதவி செய்யும் கால்நடைகள் ஆகிய அனைத்துக்குமே நன்றி செலுத்தி வழி படுவது வழக்கம்.

பொங்கல் பண்டிகை, தைத் திருநாள் கொண்டிருக்கும் ஆன்மீக ரீதியான முக்கியத்

தொடர்ச்சி▼

# தைத்திருநாள் சிறப்பிதழ்



# குடும்ப உறவுக்கு உரமிடும் தமிழர் திருநாள் தைப்பொங்கல்!

தொடர்ச்சி▲

துவம். இதே போல ஒரு பக்கம் வாழ்க்கை முறையோடு இணைந்திருக்கும் இயற்கைக்கு நன்றி செலுத்தும் ஒரு மிகப்பெரிய பண்டிகையாக பொங்கல் பண்டிகை ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டு வருகிறது.

பொங்கல், உழைக்கும் மக்கள் இயற்கைத் தெய்வமாகக் கருதப்படும் சூரியனுக்கும், மற்ற உயிர்களுக்கும் சொல்லும் ஒரு நன்றியறிதலாகக் கொண்டாடப்படுகிறது. இந்தப் பண்டிகை இந்து கடவுளான சூரிய தேவனுக்கும் இயற்கைக்கும் அர்ப்பணிக்கப்பட்டது.

'தை பிறந்தால் வழி பிறக்கும் ' என்பது பன்னெடுங்காலமாக நம் நாட்டில் வழக்கத்தில் உள்ள பழமொழியும் பொன்மொழியுமாகும். கிராமத்தில் இன்றளவும் தையுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பார்கள். எதுவாக இருந்தாலும் தை பிறக்கட்டும் பார்த்துக் கொள்ளலாம் என்பார்கள்.

கல்யாணம் பேச தை வரட்டும். ஜாதகம் பார்க்கலாம் என்று சொல்வார்கள். கொடுக்க வேண்டிய காசுக்கும் வரவேண்டிய பணத்துக்கும் தை மாதத்தை எதிர்பார்ப்பார்கள். ஏனென்றால் தையில்தான் அறுவடை முடிந்து கையில் காசு பணம் புரளும். சுப விசேடங்களுக்குத் தை மாதம் மிகவும் சிறந்தது. கல்யாணம் நிச்சயதார்த்தம் வளைகாப்பு கிரகப்பிரவேசம் என எல்லா சுபநிகழ்ச்சிகளுக்கும் இந்த மாதத்தில் குறைவிருக்காது.

புத்தாண்டு அல்லது புது வருடம் என்பது புதிய நாள்காட்டி வருடம் தொடங்குவதைக் குறிக்கிறது. ஆனால் பெரும்பான்மையான கலாச்சாரங்களில் புதுவருடத் தொடக்கம் கொண்டாடப்படுகிறது. உலகம் முழுவதும் தற்காலத்தில் உபயோகித்துவரும் கிரெகொரியின் நாள்காட்டியின்படி புது வருடமானது ஜனவரி மாதம் முதல் திகதி தொடங்குகிறது. ஆனால் தமிழுக்கு புதிய வருடம் தை ஒன்றில் பிறக்கிறது. அது இன்று ஆகும்.

ஆடி மாதத்தில் தேடி விதைத்த பயிர்களின் விளைச்சலை அறுவடை செய்து பயன் அடையும் பருவமே தை மாதம் ஆகும். அந்த அறுவடையில் கிடைத்த நெல்லின் புத்தரிசியைச் சர்க்கரை, பால், நெய் சேர்த்துப் புதுப் பானையில் இட்டுப் புத்தடுப்பில் கொதிக்க வைத்துப் பொங்கல் பொங்கி சூரியனுக்கும் மாட்டுக்கும் படைத்து உண்டு மகிழும் விழாவே பொங்கல் விழாவாகும்.

### பொங்கல் நேரம்!

இந்த வருடத்தில் பொங்கலிடுகின்ற நேரமாக காலை 5 மணி முதல் 6.40 மணி வரையாகும். தவறினால் 7.30 மணி முதல் 8.30 மணி வரை அதுவும் தவறினால் 10.30 முதல் 12 .30 வரை பொங்கல் இட்டு படைக்கலாம்.

பொங்கல் பொங்கி வழியும் நேரம் "பொங்கலோ பொங்கல்.." என்று கூறி சங்கு நாதம் எழுப்பி வழிபடுதல் வேண்டும்.

### பொங்கலை எவ்வாறு கொண்டாடுகிறோம்?

அதிகாலையில் எழுந்து நீராடி புத்தாடை அணிந்து விபூதி தரித்து திலகமிட்டு புதுப் பானையை அலங்கரித்து மஞ்சள் இஞ்சி கட்டி சாமியறையில் வைத்து வழிபட்டு பின்னர் அடுப்பில் ஏற்றவேண்டும்.

உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் வரவழைத்து விளையாட்டுகள் வைத்து அன்று மிக மிக மகிழ்வான தருணங்களாக இருக்கும். குறிப்பாக கபடி, வழுக்கு மரம், பானை உடைத்தல் போன்ற விளையாட்டுகளை விளையாடுவார்கள்.

### பொங்கல் வகைகள்

தமிழர்களின் திருநாளாம் பொங்கல் பண்டிகை நான்கு நாள்கள் கொண்டாடப் படும். போகிப் பொங்கல், தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல்

### போகிப் பொங்கல்

நம் வீட்டில் உள்ள பழையவற்றை போக்கி, வீட்டை தூய்மை படுத்துவதே போகிப் பண்டிகை என்பார்கள். பொதுவாக. உண்மையில் எமது அகத்தில் மனத்தில் இருக்கிற கெட்ட தீய எண்ணங்களை அகற்றுவதே அதன் நோக்கமாகும்.

இது பொங்கல் பண்டிகையின் முதல் நாள் ஆகும். அது ஜனவரி 13 ஆம் திகதி போகி கொண்டாடப்படுகிறது.

### தைப்பொங்கல்

புதுப்பானையில் புதிய அரிசியை இட்டு பொங்கல் இடுவர். விவசாயத்துக்கு காரணமாக இருந்த கதிரவனுக்கு சூரிய பொங்கல் படைப்பர். வெண் பொங்கல், சர்க்கரை பொங்கல் என இரு பானைகளில் பொங்கல் பொங்கி வழிபடுவது வழக்கம். ஒவ்வொரு ஆண்டும் தமிழுக்கு தை முதல் நாளில் கொண்டாடப் படுகிறது .அதாவது இவ் வருடத்தில் இன்று (14) பொங்கல் கொண்டாடப்படுகிறது.

### மாட்டுப்பொங்கல்

மூன்றாவது நாள் மாட்டுப்பொங்கலை கொண்டாடுவார்கள். இந்த நாளில் தமிழகத்தில் ஜல்லிக்கட்டு சில இடங்களில் வீர

தொடர்ச்சி▼

# தைத்திருநாள் சிறப்பிதழ்



## குடும்ப உறவுக்கு உரமிடும் தமிழர் திருநாள் தைப்பொங்கல்!

தொடர்ச்சி▲

விளையாட்டாக நடைபெறும். ஒவ்வொரு ஆண்டும் தை இரண்டாம் நாளில் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

இந்த ஆண்டு மாட்டுப்பொங்கல் காலை ஒன்பது மணி முதல் 10 .20 வரை அல்லது 11 மணி முதல் 12 30 வரை தவறினால் 1.30 முதல் 2.30 வரை கொண்டாடலாம்.

அன்று முன்னோர்கள் மூத்தவர்கள் நினைவாகவும் வழிபடலாம். கோசாலை சென்று பசுவை கழுவி அலங்கரித்து பசுவுக்கு உண வளித்து கொண்டாடலாம்.

### காணும் பொங்கல்

நான்காம் நாள் காணும் பொங்கலாகும். இந்நாளில் நண்பர்களும் உறவினர்களும் ஒருவரை ஒருவர் காணும் நாளாகும்.ஒவ் வொரு ஆண்டும் தை மூன்றாம் நாளில் அதாவது வியாழக்கிழமை காணும் பொங்கல் கொண் டாடப்படுகிறது.

அதே நேரத்தில், தைத்திருநாள் என்பது ஜோதிட ரீதியாகவும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாளாகும்.

தேவர்களின் இரவு காலமான தட்சிணாயன காலம் மார்கழி மாத இறுதி நாளோடு முடி கிறது. தை மாதம் ஒன்றாம் தேதி சூரியன் தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்கு செல்வார். சூரியன் மகர ராசிக்கு பெயர்ச்சியாகும் அன்றுதான் தை 1, பொங்கல் திருநாளாக கொண்டாடப்படுகிறது.

இதுதான் வட மாநிலங்களில் மகர சங்கராந்தி என்றும், தென் மாநிலங்களில் ஒரு சில இடங்க ளில் சங்கராந்தி என்றும் அழைக்கப்படுகிறது. மகர சங்கராந்தி என்பது தேவர்களின் பகல் காலத் தொடக்கமான உத்திராயண புண்ணிய காலத்தை குறிக்கிறது.

இத்தனை சிறப்பு மிக்க பொங்கல் திருநாளன்று அனைவரும் பாரம்பரிய முறையில் பொங்கல் கொண்டாடி மகிழ்வோம்.



## தமிழர்களின் உன்னதமான திருநாள் தைத்திருநாள்!



மிருணாளினி நடராஜன்

தமிழர்களின் நற்பண்புகளான விருந்தோம்பல், நன்றி கூறுதல், எல்லோருக்கும் மதிப்பளித்தல் போன்ற நற்பண்புகளை பிரதி பலிக்கும் ஒரு உன்னத திருநாளாக வும் அமைகின்றது.

சூரிய பகவான் ஒரு வருடத்தின் கால நிலையை வரையறுத்து மழை வீழ்ச்சியையும், பயிர்கள் வளர்வதற்கு தேவையான சாதகமான கால நிலையையும் ஏற்படுத்தி கொடுப்பதால் உலகில் மானிடர்கள் மட்டுமன்றி ஏனைய உயிரி னங்களும் உயிர் வாழ்வதற்கு ஓர் உயர் கொடுக்கும் சக்தியாக இருந்து வருகிறார்.

உலகில் வாழ்ந்து கெண்டிருக்கும் மானிடப் பிறவிகளான நாம் சூரிய பகவானை துதித்து வழிபடவேண் டிய நிலையில் இருக்கின்றோம். சூரிய பகவானின் அனுக்கிரகத்தால்

தொடர்ச்சி▼

# தைத்திருநாள் சிறப்பிதழ்



# தமிழர்களின் உன்னதமான திருநாள் தைத்திருநாள்!

தொடர்ச்சி ▲

தான் உலகில் பயிர்கள் செழித்து வளர்ந்து எமக்குத் தேவையான உணவை பெற்றுக் கொடுக்கின்றன.

நதிகளில் இருந்தும், நீர்த்தேக்கங்களில் இருந்தும் நீரைப் பயன்படுத்திய விவசாய பெருங்குடி மக்கள் தங்கள் விளைச்சல் நிலங்களை பொன் விளையும் பூமிகளாக மாற்றுகின்றார்கள்.

நாற்சதுரமாக நாற்புறமும் வாசல் வைத்து கோலம் போட்டு குறிக்கப்பட்ட இடத்தை புனித இடமாக மதிப்பார்கள். கோலம் போடப்பட்ட இடத்தை நான்கு கம்புகள் நட்டு அதில் நூல் கட்டி தோரணம், மாவிலை தொங்க விடுவார்கள். கோலமிட்டு புனிதமாக்கிய இடத்தின் நடுவில் புதிதாக மண்ணினால் பிடித்து வைத்த மூன்று அடுப்பு கட்டிகளையும் வைத்து பொங்கல் பானை வைப்பதற்கு அடுப்பை தயார்படுத்துவார்கள். சூரிய பகவானுக்கு பொங்கல் பொங்கு முன் வீட்டின் சுவாமி அறையில் தீபம் ஏற்றி வணங்கிய பின் சூரிய பொங்கலை ஆரம்பிப்பார்கள்.

குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றுகூடி தோத்திரங்கள் பாடி நிற்க சாணத் தால் பிள்ளையார் பிடித்து வைத்து (பிள்ளையார் சிலையும் வைக்கலாம்), நிறைகுடம் வைத்து, குத்துவிளக்கு ஏற்றி, தேங்காய் உடைத்து வைத்து தூபம், தீபம் காட்டி விநாயகரை வழிபெற்ற பின், அடுப்பில் நெருப்பு மூட்டி, புதுப்பானை யின் கழுத்தில் மாவிலை, இஞ்சி இலை, மஞ்சள் இலைகளைக் கட்டி (காப்புக் கட்டி), விபூதிக் குறி கள் வைத்து, திலகமிட்டு புனிதமாக்கி அதனுள் நீரும் பசுப்பாலும் விட்டு அடுப்பில் பொங்க வைப்பார்கள்.

பால் பொங்கி எழுந்து வழியும்வரை நெருப்பை கூட எரிய விடுவார்கள். பால் பொங்கி வழியும்போது கடவுளை வணங்கி "பொங்கலோ பொங்கல்" என ஆரவாரித்து புது அரிசியை வீட்டுத் தலைவர் அல்லது ஆண்மகன் இரு கைகளாலும் அரிசியை கிள்ளி மூன்று முறை (வலஞ்சுளியாக) சுற்றி பானையில் இட்டு மகிழ்ச்சியுடன் பொங்கலிடுவார்கள்.

அப்போது சக்கரைப் பொங்கலாயின் பயிற்றம் பருப்பு, சக்கரை, கஜு, ஏலக்காய் முதலியவற்றை போட்டு பொங்கல் செய்வார்கள். பொதுவாக தைப் பொங்கலின் போது சக்கரைப் பொங்கலே பொங்குவது வழக்கம். ஆனால் சிலர் வெண் புக்கையும் சாம்பாரும் (கறியும்) வைப்பார்கள். சிறுவர்கள் பட்டாஸ் கொழுத்தி, மகிழ்ச்சியோடு ஆடிப்பாடுவர்.

பால் பொங்கி அரிசி போட்டபின் பானையில் இருக்கும் மிதமிஞ்சிய நீரை ஒரு சுத்தமான பாத் திரத்தில் எடுத்து அதனை பூஜைகள் முடியும்வரை வைத்திருந்து அதனை மாவிலை கொண்டு வீட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் படும் படியாகத் தெளிப்பார்கள். அந்த நீரில் சூரியனின் சக்தி இருப்பதால் சூரிய பகவானின் சக்தி எல்லா இடங்களிலும் பட்டு பிரகாசிக்கும் (தோஷங்கள் நீங்கும்) என்பது அவர்களின் நம்பிக்கை.

வேளாண்மைக்கு வேண்டிய மழை நீரையும், சூரிய ஒளியையும் (வெய்யிலையும்), காற்றையும் தேவைக்கேற்ப வழங்கி தம்மையும், நாட்டையும் செழிப்புடன் வாழ உதவிய இயற்கைக்கும் (பூமி, சூரியன், வழிமண்டலம், நீர் நிலைகள் போன்றவற்றுக்கும்) தம்மோடு சேர்ந்து கஷ்டப்பட்டு உழைத்த கால்நடைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் தமது நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாக உழ வர்களால் கொண்டாடப்பெற்று வந்துள்ளது.

பொங்கல் விழாவானது முன்போல் வீடுகளில் மட்டுமன்றி ஆலயங்கள், கல்விக் கூடங்கள், தொழில் நிலையங்களிலும், இந்துக்கள் அல்லாத தமிழ் மக்களாலும் வெகு சிறப்பாக கொண்டா டப்பெற்று வருவதால் தமிழர் பண்டிகையாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப் பெற்று சிறப்படைகின்றது.

"தைப்பொங்கல் பண்டிகை"யின் போது உழவர்கள் தாம் அறுவடைசெய்த "புதிரை" (நெற் கதிர்களை) அரிசியாக்கி அதில் பொங்கல் செய்து கொண்டாட, பல்வேறு தொழில் புரிவோர் உழவர்களுடன் பண்டமாற்றுச் செய்து புதிய அரிசியை வாங்கி பொங்கல் செய்து கொண்டாடுகின்றார்கள்.

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழர்களும், இந்தியத் தமிழர்களும் அதிகமாக வாழும் கனடாவில் உள்ள மிகப்பெரிய "மார்க் கம்" மாநகர சபை ஒவ்வொரு வருடத்திலும் வரும் ஜனவரி 13 ஆம், 14 ஆம், 15 ஆம் திகதிகளை தமிழர்களின் பாரம்பரிய நாள்களாக வும், தைப்பொங்கல் பண்டிகையை பாரம்பரிய விழாவாகவும் அங்கீகரித்துள்ளதுடன் தை மாதத்தை தமிழர்களின் புனித மாதமாகவும் பிரகடனப்படுத்தியுள்ளது.

இதன் மூலம் கனடாவில் ஒரு தமிழர் பண்டிகை யையும் அதனோடு தொடர்புடைய மாதத்தி னையும் அதிகாரபூர்வமாக அங்கீகரித்த முதல்

தொடர்ச்சி ▼

## தைத்திருநாள் சிறப்பிதழ்



# தமிழர்களின் உன்னதமான திருநாள் தைத்திருநாள்!

தொடர்ச்சி▲

வெளிநாட்டு மாநகர சபை என்ற பெருமையை மேற்படி "மார்க்கம் நகர சபை" பெற்றுள்ளது.

உழவர்கள் மார்கழி மாதத்தில் (தைப் பொங்கலுக்கு முன்) ஒரு நல்ல நாள் பார்த்து "புதிர் எடுத்தல்" நிகழ்வை நடத்துவார்கள். குடும்பத் தலைவர் குறிப்பிட்ட ஒரு நல்ல நாளில் காலையில் குளித்து கடவுளை வணங்கி வயலுக்குச் சென்று வயல் வரம்பில் முதற்கடவுளான பிள்ளையாரை வைத்து பூ, பழம், பாக்கு, வெற்றிலை ஆகியவற்றை படைத்து தேங்காய் உடைத்து விநாயகரையும், குலதெய்வத்தையும் வணங்கி, அதன் பின்னர் அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிர்களில் சிறிதளவை வெட்டி வீட்டுக்குக் கொண்டு செல்வார். இதேநேரம் குடும்பத்தலைவி தோய்ந்து, வீடு பெருக்கி, கழுவி, மெழுகி புதிர் வாங்குவதற்கு தயாராக இருப்பார்.

தலைவன் கொண்டு வருகின்ற நெற்கதிர்களை மனையாள் வாங்கி சாமியறைக்கு கொண்டு செல்லும் வழக்கம் உண்டு. அதன் பின்னர் கடவுளை வணங்கி புதிய நெற்கதிர்களை சாமியறை மற்றும் சமையல் அறைகளில் கட்டித் தொங்கவிடுவார்கள்.

மிகுதியாக உள்ள நெற்கதிர்களை அரிசியாக்கி தைப் பொங்கலுக்காக வைத்திருப்பார்கள். கடின உழைபின் மூலம் கிடைக்கப்பெற்ற நெற்கதிர்களை நல்ல நாளில் "புதிர்" எடுப்பதன் மூலம் வருடம் முழுவதும் அவர்களுக்கு சாப்பாட்டிற்கு குறைவிருக்காது என்பது அவர்களுடைய நம்பிக்கையாகும்.

தைப்பொங்கல் தினத்தன்று ஒவ்வொரு குடிமகனும் தம்வீட்டுப் பொங்கல் படையல் சூரியன் உதிக்கும் போதே முதல் நல்விருந்தாக அமைய வேண்டும் என்ற ஆதங்கத்தில் அதிகாலையே விழித்தெழுந்து பொங்கலுக்கான ஆயத்தங்களைச் செய்வார்கள். எல்லோரும் அதிகாலையில் தோய்ந்து (முழுகி), வீடு பெருக்கி, கழுவி, முற்றம் கூட்டி, வாசலில் சாணம் கொண்டு மெழுகி அதில் உலக்கை வைத்து அரிசி மா, மஞ்சள் மாவினால் அல்லது செங்கட்டி மண்ணால் கோலம் போடுவார்கள். முற்றம் சீமந்தால் ஆனதாயின் அதனை சுத்தம் செய்து கழுவி கோலம் போடுவார்கள். அத்துடன் வீட்டு வாசலில் (கதவு நிலையில்) மாவிலை கட்டி சூரிய பகவானை வரவேற்க தயாராக இருப்பார்கள்.

புதுமனை, புதுமணமக்கள் இருப்பவர்கள் பொங்கல் விழாவை "தலைப் பொங்கல்" என வெகு சிறப்பாக கொண்டாடுவார்கள்.



## தைத்திருநாள் சிறப்பிதழ்

# அனைவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும்!

## பொங்கல் வாழ்த்துச் செய்தியில் இந்துக் குருமார் அமைப்பு

இன்று மங்கலச் சிறப்புடன் தைத்திங்கள் மலர்ந்துள்ளது. ஒரு இனத்தின் அல்லது ஓர் குழுவினருடைய பண்பாட்டினையும் கலாசார விழுமியங்களையும் தொண்மையையும் அவர்கள் கடைப்பிடித்து வரும் விழாக்கள் பண்டிகைகள் ஊடாக நாம் அறிந்து கொள்ள முடியும். அனைவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும்.

இவ்வாறு இந்துக் குருமார் அமைப்புத் தலைவர் சிவாகமகலாநிதி சிவஸ்ரீ கு.வை.க. வைத்தீஸ்வரக்குருக்கள், செயலாளர் சிவஸ்ரீ ச. சாந்தரூப குருக்கள் ஆகியோர் இணைந்து அனுப்பி வைத்துள்ள பொங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**தமிழர்கவின் பெருமையை,**

**"தைஇத் திங்கள் தண்கயம் படியும்" என்று நற்றிணை**
**"தைஇத் திங்கள் தண்ணிய தரினும்" என்று குறுந்தொகை**
**"தைஇத் திங்கள் தண்கயம் போல்" என்று புறநானூறு**
**"தைஇத் திங்கள் தண்கயம் போல" என்று ஐங்குறுநூறு**
**"தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ"** என்று கலித்தொகை யும் கூறி நிற்கின்றன.

பொங்கல் திருநாள் தமிழர்களின் நன்றி மறவாமை பண்பினையும் பிரதானமாக எடுத்துக் காட்டுகின்றது.



பல்வேறு சிறப்புகளை தன்னகத்தேயுடைய தமிழ் மக்கள் பல இன்னல்களை, துன்பங்களை சுமந்தவர்களாவே காணப்படுகிறார்கள். தற்காலத்தில் எமது இளம் சமுதாயத்தில் பல்வேறு பிறழ்வுகளைக் காண்பது வேதனையே.

இவற்றிலிருந்து நாம் மீண்டு உயர்வு பெற இறை பிரார்த்தனையுடன் தன்னம்பிக்கையும் அவசியமாகும். இறை வழிபாட்டையும் திருமுறைகளின் உயர்வையும் எமது இளம் சமூகத்தினருக்கு அதிகம் அறிய வைக்க வேண்டும்.

இனியவை நடக்க வேண்டும். ஒவ்வொருவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும். சுபமங்களம் உண்டாகட்டும்.- என்றுள்ளது.

# அனைவருக்கும் தித்திக்கும் வாழ்க்கை தரட்டும்!

## பொங்கல் வாழ்த்துச் செய்தியில் பாபு சர்மா



தமிழர் திருநாள் எனப் பெருமையாகப் போற்றிக் கொண்டாடப்படும் தைபொங்கல் தினம் அனைவருக்கும் தித்திக்கும் வாழ்க்கையை தரக்கூடிய நல்ல ஆரம்ப நாளாக அமைய வேண்டும்.

இவ்வாறு சர்வதேச இந்துமத பீட செயலாளர் சிவஸ்ரீ ராமசந்திரக் குருக்கள் பாபு சர்மா இலங்கை வாழ் அனைத்து தமிழர்களுக்கும் தனது பொங்கல் வாழ்த்தைத் தெரிவித்துள்ளார்.

பொங்கலை முன்னிட்டு அவர் தெரிவித்துள்ள வாழ்த்துச் செய்தியல் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பொங்கல் பானையில் அரிசி இட்டு பொங்கி அந்த இனிமையான பொங்கல் சோறு தித்திப்பது போல் வாழ்கை அனைவருக்கும் தித்திப்பாக அமைய வேண்டும்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் எனும் பாரதியாரின் கூற்றுக்கு அமைய உழவர்களுக்கு மட்டுமல்ல காரண கர்த்தாவான சூரிய பகவானுக்கு பொங்கல் அமுது இட்டு கண்ணுக்குத் தெரியும் சூரிய பகவானைப் போற்றி வணங்கி அயலவர்களுடன் அமுதை மட்டுமல்ல அன்பையும் பகிர்ந்து நல்லுறவு பேணி இலங்கை வாழ் அனைவரும் சுபீட்சம் அடைய ஒரு தாய் மக்களாக கைகோர்ப்போமாக.- என்றுள்ளது.

தைத்திருநாள் சிறப்பிதழ்

# எமது பாரம்பரிய கலைவடிவங்களை அடுத்த தலைமுறைக்கு வழங்குவோம்

## தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் செஞ்சொற்செல்வர்



எங்கள் சமூகத்தின் உயர்ந்த கலை மரபைப் பொங்கல் காலத்தில் எம் முன்னோர் அரங் கேற்றி மகிழ்ந்தனர். எனவே எமது பாரம் பரிய கலைவடிவங்களை அடுத்த தலைமுறை பின்பற்றுவதற்கு நாம் வழிசெய்ய வேண்டும். எமது பாரம்பரியக் கலை வடிவங்களை உரிய வகையில் எமது தலைமுறைக்கு வழங்குவோம். கலைகள் கவலையைப் போக்கக் கூடியவை, மனதுக்கு அமைதியை தரக்கூடியவை. ஒவ் வொரு தனி மனிதனின் ஆற்றலையும் வெளிப்படுத்துவதற்கு பண்டிகைக்கால கலை அரங்குகள் கூட்டப்பட வேண்டும்.

இவ்வாறு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவரும் சிவபூமி அறக்கட்டளைத் தலைவருமான செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரி வித்துள்ளார்.

தமிழர்களின் திருநாளாம் தைத் திருநாளை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

உலகம் முழுவதும் வாழும் சைவத் தமிழர் களின் உன்னத பண்டிகைத் திருநாளாக தைப்பொங்கல் விளங்குகிறது. இயற்கைத் தெய்வமாகிய சூரியனுக்கு தாம் வாழும் இல்ல முற்றத்தில் பொங்கிப் படைத்து வழிபாடு செய்யும் பாரம்பரியம் பண்டுதொட்டு இன்று வரை தொடர்கிறது.

வெளிச்சம் தந்து விடிவு தந்து எம்மை வாழவைக்கும் கதிரவனுக்கு நன்றி செலுத் தும் நாளாக இந்த நாள் அமைந்துள்ளது. தைப்பொங்கல் உழுது பயிர் செய்யும் உழவர் பெருமக்களுக்கு நன்றி கூறும் நன்நாளாகும். பாடுபட்டு உழைக்கும் உழவர் பெருமக்களால் நாம் உண்டு மகிழ்கிறோம். உழவர் பெரு மக்களை உயரத்தில் வைத்து போற்றியவர்கள் தமிழர்கள்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்"

என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைய நாம் வாழ உதவும் உழவர் பெருமக்களை இந்த நாளில் உளமார வாழ்த்துவோம்.

தைப்பொங்கல் நாளில் நாம் வசிக்கும் இல்லங்களின் வாசலில் தவறாது பொங்க வேண்டும். பால் பொங்கும் போது மூப்பு அடிப்படையில் பானையில் ஒவ்வொருவராக அரிசியிட்டு தினமும் உண்பதற்கு வழிதந்த தெய்வத்தை போற்ற வேண்டும். இந்தப் பண்பாட்டு மரபை நாம் என்றும் கைவிடக்கூடாது. இப்பண்பாட்டை நாம் மறப்போமேயானால் எமது அடுத்த தலைமுறையிடம் எமது பாரம்பரியங்கள் தெரியாமலே போய்விடும். பொங்கிப்படைத்த உணவை உற்றார், உறவினர், நண்பர்களுக்குப் பகிர்ந்தளித்து அன்பைப் பெருக்க வேண்டும்.

எங்கள் சமூகத்தின் உயர்ந்த கலை மரபைப் பொங்கல் காலத்தில் எம் முன்னோர் அரங் கேற்றி மகிழ்ந்தனர். எனவே எமது பாரம் பரிய கலைவடிவங்களை அடுத்த தலைமுறை பின்பற்றுவதற்கு நாம் வழிசெய்ய வேண்டும். கலைகள் கவலையை போக்கக்கூடியவை, மனதுக்கு அமைதியை தரக்கூடியவை. ஒவ்வொரு தனி மனிதனின் ஆற்றலையும் வெளிப்படுத்துவதற்கு பண்டிகைக்கால கலை அரங்குகள் கூட்டப்பட வேண்டும்.

எங்கள் மண்ணில் அறம் தழைக்கவும் அன்பை வளர்க்கவும் நல்ல பண்புகளை நாம் பேணவும் பொங்கல் நாளைச் சிறப்பாக கொண்டாடவேண்டும். அன்பர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான பொங்-கல் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.- என்றுள்ளது.

# தைத்திருநாள் சிறப்பிதழ்



# பொங்கல் தமிழ் மக்களின் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த விழாவாகும்!

## வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ



தைப்பொங்கல் என்னும் அறுவடைத் திரு விழா உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களால் கொண்டாடப்படும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த விழாவாகும். மரபு ரீதியாக அறுவடைக் காலத்தில் கொண்டாடப்படும் இந்த விழா நன்றி யுணர்வு மற்றும் செழிப்புடன் தொடர்புடையது. தைப்பொங்கலின் உண்மையான பொருளை புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது.

இவ்வாறு பொங்கல் வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

விவசாய வாழ்க்கை முறையில், ஒருவரின் பொருளாதாரத்தையும் வாழ்க்கையையும் வலுப்படுத்தி, பயிர்களைச் செழிப்பாக்க உதவிய சூரியன், மழை, இயற்கை மற்றும் கால்நடை களுக்கு நன்றி தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம், நன்றி செலுத்துதல் என்ற பெரிய பாடம் கற்பிக்கப்படுகிறது, இதனை எதிர்கால சமு தாயத்தில் முறையாக உள்வாங்குவது நமது பொறுப்பாகும்.

ஒரு நாட்டின் மக்களுக்கான பொறுப்பை ஏற்றுள்ள ஆளும் கட்சிக்கு, பொது மக்களின் பொறுப்புகளை நிறைவேற்றுவது என்பது, அந்த அதிகாரத்தை வழங்கிய மக்களுக்கு செலுத் தப்படும் நன்றி மற்றும் பொறுப்புணர்வின் வெளிப்பாடாகும் என்பதை தைப்பொங்கல் விழாவின் உட்பொருளை சரியாக புரிந்து கொள்வதன் மூலம் உணரலாம்.

ஆரம்பத்தில் விவசாய சமூகத்துக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்த இந்த விழா, இன்று இன, மத வேறுபாடுகளைக் கடந்து அனைத்து தமிழ் மக்களின் தேசிய விழாவாக மாறியுள்ளது.

பல்மத, பல்லின, பல்மொழி சமூகம் கொண்ட நமது தாய்நாட்டில், பன்முகத்தன்மையில் ஒற்றுமையை ஊக்குவிக்கும் மற்றொரு தேசிய விழாவாகத் தைப்பொங்கல் விழாவை ஒன்றி ணைந்துக் கொண்டாடுவது நமது கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாக்க உதவும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான வரலாற் றைக் கொண்ட தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடும் இலங்கை வாழ் சகோதர சகோதரி களுக்கு பெரும் மகிழ்ச்சியுடன் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம். அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்.– என்றுள்ளது.

# தமிழ் இனத்தின் மரபுரிமை தினம் இன்று!

## பொங்கல் வாழ்த்துச் செய்தியில் சி.வி.கே.



உலகத் தமிழ் மக்களின் தொன்மைச் சிறப்புமிக்க தைப் பொங்கல் நிகழ்வு வீடு கள்தோறும் நிறுவனங்கள் தோறும் கொண்டா டப்படுகின்றது. தமிழ் இனத்தின் மரபுரிமை தினமாகவும் இது அமைகின்றது.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி யின் பதில் தலைவரும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவருமான சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

உலகத்திலேயே பயிர்களுக்கு சக்தி வழங்கும் சூரியனுக்கும் ஏர் இழுக்கும் எருது களுக்கும் பொங்கல் மூலம் நன்றிக்கடன் செலுத்தும் தினமாகவே தைப்பொங்கல் விளங்குகின்றது.

இவை உழைக்கும் வர்க்கத்துக்கு மதிப் பளிக்கும் தமிழ் இனப்பண்பாட்டின் வெளிப் பாடு ஆகும்.

இது ஒரு சைவத்தமிழ் மக்களின் நிகழ் வாக உருவாகி வளர்ந்து வந்தாலும் காலப் போக்கில் தமிழ்த் தேசிய இனத்தின் பொங்க லாக பரிணமித்துள்ளது.

இந்துக்கள் அல்லாத ஏனைய சமயத் தவர்களுக்கும் குறிப்பாக கிறிஸ்தவ மக்களும் தைப்பொங்கலைக் கொண்டாடுவதை நாம் காணலாம்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற முது மொழிக்கு அமைய எமது உறவுகள் அனை வரது வாழ்வும் சூரிய ஒளியைப் போல் பிரகாச மாக அமைய வேண்டும் என்று பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.– என்றுள்ளது.

# தைத்திருநாள் சிறப்பிதழ்



# விவசாயிகளைச் செல்வச்செழிப்போடு வாழ வைப்பதற்கு உறுதி பூணுவோம்!

## பொங்கல் வாழ்த்துச் செய்தியில் வடக்கு ஆளுநர் வேதநாயகன்

தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடும் இந்த நாளில், வடக்கு மாகாணத்திலும் உலகெங்கிலும் உள்ள அனைத்து தமிழ் உறவுகளுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எங்கள் விவசாயிகளுக்கு நன்றிக்கடனாக, அவர்களை செல்வச்செழிப்போடு வாழ வைப்பதற்கு இந்தத் தைப்பொங்கல் பண்டிகையில் நாங்கள் உறுதி பூணுவோம்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தைப்பொங்கல் என்பது நன்றியுணர்வுக்கான பண்டிகை. சூரியனால் உயிர்வாழ்வதற்காகவும், விவசாயிகளின் அயராத முயற்சிகளுக்காகவும் நன்றி தெரிவிக்கும் தருணம் இது.

இயற்கையை கடவுளாக வழிபடும் எங்கள் மரபின் அடிப்படையில் இந்தத் திருநாள் முக்கியம் பெறுகின்றது. எங்கள் பாரம்பரியங்களை ஊடுகடத்தும் வடிவிலும் இந்தத் தைப்பொங்கல் பண்டிகை சிறப்பானதாக அமைக்கின்றது.



வடக்கு மாகாணத்தின் இரு கண்களாக விவசாயமும், மீன்பிடியுமே இருக்கின்றன. விவசாயிகளுக்கு நன்றி செலுத்தும் இந்த அறுவடைத் திருநாள் எமது மாகாணத்துக்கு மிகவும் சிறப்பானது. எங்கள் விவசாயிகளுக்கு நன்றிக்கடனாக, அவர்களை செல்வச்செழிப்போடு வாழவைப்பதற்கு இந்தத் தைப்பொங்கல் பண்டிகையில் நாங்கள் உறுதி பூணுவோம்.

பொங்கலின் மகிழ்ச்சி ஒவ்வொரு வீட்டையும் ஒவ்வொரு இதயத்தையும் மனநிறைவாலும் நிரப்பட்டும். இனிய தை பொங்கல் நல்வாழ்த்துக்கள்.– என்றுள்ளது.

# நிலமும் வளமும் செழித்து தன்னலமற்ற செயல் பெருகட்டும்

## பொங்கல் வாழ்த்தில் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி எம்.பி.

மங்களகரமான பொங்கல் திருநாளில், அனைத்துத் தமிழ் உறவுகளுக்கும் என் இதய பூர்வமான வாழ்த்துகள். இந்தத் தைத் திருநாளுடன் நிலமும் வளமும் செழித்து தன்னலமற்ற செயல்கள் பெருகட்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி பொங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இந்தப் பொங்கல் விழா, விவசாயிகளின் வரலாற்றுப் பெருமையைப் போற்றும் திருநாளாக மட்டுமல்லாமல், ஒருவருக்கொருவர் அன்பும் ஒற்றுமையும் கொண்டாடும் சிறப்பான நாளாகவும் விளங்குகின்றது.

விவசாயத்தின் முக்கியத்துவத்தை நினைவூட்டும் இந்த விசேட நாளில், நிலமும் வளமும் செழித்து, தூய மனங்களும்



தன்னலமற்ற செயல்களும் பெருகட்டும்.

வளமும், அமைதியும், புதிய ஆரம்பங்களும், அன்பும் உறுதியும் உங்கள் வாழ்க்கையில் நிறைவாகட்டும்.

உங்கள் குடும்பத்தினரின் வாழ்வில் சந்தோஷம் மற்றும் நலன்கள் அலை மோதட்டும்.

வாழ்க தமிழர் பாரம்பரியம், வளர்க நம் சமூக சகோதரத்துவம்.– என்றுள்ளது.

# தைத்திருநாள் சிறப்பிதழ்



# தொழிலாளர்களின் வாழ்க்கையில் தீமைகளுக்கு முற்றுப்புள்ளி வரட்டும்!

**பொங்கல் வாழ்த்தில் நுவரெலியா முன்னாள் எம்.பி. மருதபாண்டி ரமேஸ்வரன்**



தைத் திருநாளாம் தைப்பொங்கல் கோலாகலமாகக் கொண்டாடும் அனைத்து இந்துப் பெரு மக்களுக்கும் உளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தொழிலாளர்களின் வாழ்க்கையில் தீமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஒவ்வொருவரதும் ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளையும் வெற்றி பெறச்செய்து எம்மில் பல நல்ல வகையான மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுக்க இறைவனை பிரார்த்திப்போம்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் விடுத்துள்ள தைத் திருநாள் வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களின் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

உழவர்களின் அறுவடைத் திருநாளாம் தைத்திருநாள் அன்று மகர சங்கராத்தியம் கொண்டாடப்படுகின்றது. சூரியனுடைய வடக்கிலிருந்து தெற்கு நோக்கிய பயணம்தான் மகர சங்கராத்தியம் என்று சொல்கின்றார்கள்.

எமக்கு மழையையும் வெயிலையும் கொடுத்து உதவுகின்ற சூரியனுக்கு சூரியப் பொங்கல் வைத்து நன்றி செலுத்துகின்ற ஒரு திருநாளாக இத்தைப் பொங்கல் அமைகின்றது.

பொங்கல் பொங்கி வருகின்றபோது நாம் அனைவரும் சௌபாக்கியமாக வாழ்வதாக ஐதீகம் சொல்லுகின்றது. பொங்கல் பலவிதமானவை. கோலிப் பண்டிகை, தைப்பொங்கள், மாட்டுப்பொங்கள், கானும் பொங்கல் என பல விதமான பொங்களை கொண்டாடுகின்றோம்.

எனவே தொழிலாளர்களின் வாழ்க்கையில் தீமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஒவ்வொருவரதும் ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளையும் அழுத்தங்களையும் வெற்றி பெறச்செய்து எம்மில் பல நல்ல வகையான மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் மேலும் மக்களிடையே புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு போன்ற எண்ணங்கள் உருவாகி எமது மக்கள் சிறப்பாக வாழ்வதற்காகவும் எல்லா வல்ல இறைவனை பிரார்த்திப்போம்.– என்றுள்ளது.

# பொங்கல் தமிழர் வாழ்வில் பொங்குமா?

**பொங்கல் வாழ்த்தில் காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஜெயசிறில்**



இயற்கையோடு இயைந்து இயற்கைக்கு உளப்பூர்வ நன்றி பாராட்டி உழைப்பின் உன்னதத்தைப் போற்றுவது தமிழர் கொண்டாடும் தைப் பொங்கல் விழாவின் உன்னத நோக்கமாகும். அப்படிப்பட்ட புனித நாளில் தமிழர் வாழ்வில் நீண்ட காலமாக புரையோடிப்போயிருக்கும் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வானது இந்த வருடப் பொங்கலுடனாவது எட்டப்படவேண்டும்.

இவ்வாறு காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கே.ஜெயசிறில் தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

உள்ளத்தில் பொங்கும் மகிழ்ச்சி இந்தத் தரணி எங்கும் பொங்க வேண்டும்.

பொங்கல் என்பதற்கு சாப்பிடும் பொங்கல் என்று பொருள் அல்ல. பொங்கிப் பெருகி வருவது என்று பொருள். தமிழர்கள் இருக்கும் இடமெல்லாம் பொங்கல் விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது.

சூரியனை வழிபடுவதால் உலகில் அடைய முடியாதவையே கிடையாது. வேதம் கதிரவனைப் பலவாறும் புகழ்கிறது. 'நாஸ்திகர்களாலும் இல்லை என்று கூற முடியாத கடவுள் சூரிய பகவானே' என்பதை வேதம் கூறுகிறது.

அப்படிப்பட்ட சூரியபகவானுக்கு நன்றி கூறுகின்ற இந்நாளில் சகலரது வாழ்விலும் நன்றியுணர்வு ஏற்படவேண்டும்.– என்றுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் -14.01.2025

## மேஷம்

இன்றைய செயல்களில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும். அமைதியின்மை காரணமாக நீங்கள் கவனத்திலிருந்து விலக நேரலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது உணர்ச்சி வசப்படுவீர்கள். இத்தகைய போக்கை நீங்கள் தவிர்ப்பது நல்லது.

இன்று உங்கள் துணையுடனான உறவு சிறப்பாக இருக்காது. இருவரும் மகிழ்ச்சியாக இருக்க அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி நிலைமையில் வளர்ச்சி காணப்படாது. குடும்பத்திற்காக தேவையற்ற செலவுகள் செய்ய நேரும்.

இன்று உங்களிடம் அமைதியின்மை உணர்வு காணப்படும். இதனால் முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மகிழ்ச்சியாக இருக்க முயலுங்கள். இதனால் ஆரோக்கியமாக இருக்கலாம்.

## ரிஷபம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்களின் அனுசரணையான தகவல் தொடர்பு திறமை காரணமாக நற்பலன்களைப் பெறுவீர்கள். இன்று நீங்கள் நல்ல முடிவை எடுக்கலாம். அது உங்களை முன்னேற்றும்.

உங்களுக்கு பணியில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு நன்மை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக மேற்கொள்வீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் துணையுடன் தரமான நேரத்தை பகிர்ந்து மகிழ்வீர்கள்.

இன்று பண வரவிற்கு சிறந்த நாள். உங்கள் சேமிப்பிற்காக போதிய அளவு பணம் ஒதுக்க உங்களால் இயலும்.

உங்களின் மகிழ்ச்சியான மனநிலை காரணமாக இன்று நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

## மிதுனம்

இன்று நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள். எனவே வெற்றிகரமான நாளாக அமையும். இன்று நன்கு சம்பாதிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் லாபகரமான செயல்களை செய்வீர்கள்.

உங்கள் பணி உங்களுக்கு மகிழ்சிகரமாக இருக்கும். உங்கள் பணியை மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். அவர்களின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் தாயுடன் நல்லுறவு காணப்படும். உங்கள் பெற்றோருடனான உறவில் திருப்தி காணப்படும்.

இன்று நிதி நிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். நீங்கள் பணத்தை அனுபவித்து மகிழ்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது. தியானம் மேற்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

## கடகம்

இன்று மந்தமான நாளாக இருக்கும். நீங்கள் இறை நாட்டம் கொண்டு பக்தியில் ஈடுபடுவீர்கள்.

இன்று பணியிடச் சூழல் சிறப்பாக இருக்காது. பணிகள் அதிகமாக காணப்படும் இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வது சிறந்தது. நல்ல புரிந்துணர்வின் மூலம் இருவரும் நெருக்கமாகலாம்.

இன்று ஆரோக்கியமான நிதி நிலைமை காணப்படாது. கூடுதல் செலவுகள் சந்திக்க நேரும். இதனால் உங்களுக்கு வருத்தம் ஏற்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படாது. கால் வலி மற்றும் தோள் வலி போன்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

## சிம்மம்

இன்று கூடுதல் பொறுப்புகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் இலக்குகளை அடைய முடியாதபடி சில உணர்வுகள் உங்களிடம் காணப்படும்.

உங்களின் முயற்சிக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறாத காரணத்தால் உங்கள் பணியைப் பற்றிய கவலை காணப்படும்.

இன்று காதலின் அன்பும் வனப்பும் குறைந்து காணப்படும். உங்கள் அன்பை முறையாக வெளிப்படுத்த இயலாது.

பணப்புழக்கம் சுமாராக இருக்கும். இன்று அதிக செலவுகளை சந்திக்க நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி அல்லது இருமல் போன்ற பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

## கன்னி

இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்கும். நீங்கள் சில முக்கிய முடிவுகளை எடுக்கலாம். உங்கள் சமயோசித புத்தியால் இன்றைய நாளை உற்சாகமாக ஆக்குவீர்கள்.

உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து எதிர்பாராத அனுகூலங்களை நீங்கள் எதிர்பார்க்கலாம். இதனால் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் காணப்படும்.

உங்கள் துணையுடன் நகைச்சுவையாக பேசுவீர்கள். இதனால் இருவரும் நெருக்கமாவீர்கள்.

உங்களிடம் இருக்கும் பணம் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பை மேம்படுத்த இயலும்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள். உங்களின் உடல் மற்றும் மன நிலை சிறப்பாக இருக்கும்.

## துலாம்

உங்கள் நம்பிக்கையான அணுகுமுறையும் உங்களின் சிறந்த முயற்சியும் உங்களுக்கு இன்று அதிர்ஷ்டத்தை பெற்றுத் தர போதுமானதாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

பணியிடச் சூழல் சீராக யாருக்கும். நீங்கள் சிறப்பாக பணியாற்றி தரமான பணிகளை வழங்குவீர்கள்.

உங்கள் தந்தையின் நல்லாதரவு கிடைக்கப் பெறுவீர்கள். உங்கள் பெற்றோருடன் நல்லுறவு கொண்டு மகிழ்வீர்கள்.

இன்று அதிக அளவில் பண வரவு காணப்படும். கடனுக்கான அனுமதி கிடைக்கப் பெற்று அதன் மூலம் பண வரவு காணப்படும்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## விருச்சிகம்

இன்று பாதகமான விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் எந்த செயலையும் ஒன்றிற்கு இரண்டு முறை யோசித்து செய்ய வேண்டும். இசை கேட்பது அல்லது வேறு பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் உங்கள் மனதை ஈடுபடுத்துங்கள்.

கவனக் குறைவு காரணமாக பணியில் தவறுகள் செய்ய நேரலாம். எனவே பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் மனதில் காணப்படும் தவறான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் விரும்பத்தகாத தருணங்களை எதிர் கொள்வீர்கள்.

இன்று பணப்புழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. தேவையற்ற விஷயங்களுக்காக பணம் சிலவு செய்ய வேண்டியிருக்கும்.

தோள் வலி மற்றும் தோல் எரிச்சல் போன்ற பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. தூக்கமின்மையே இதற்கு காரணம்.

# இன்றைய ராசி பலன்கள் -14.01.2025




பல சௌகரியங்கள் காணப்பட்ட போதிலும் நீங்கள் பதட்டமாக உணர்வீர்கள். இதனை சமாளிக்க நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். இன்று அமைதியின்மை உணர்வை தவிர்க்க வேண்டியது அவசியம்.

நீங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுத்துவதற்கான வாய்ப்பு கிடைக்காது.

உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்ள இயலாது. இந்த நேரத்தில் நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பும் உள்ளது.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு சற்று கவலை ஏற்படுத்தும்.




இன்று உங்கள் செயல்களில் நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். அப்பொழுது தான் அனைத்தும் உங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். அமைதியின்மை உணர்வு உங்களை பாதிக்கும்.

நீங்கள் பணிகளை திறமையாக கையாள இயலாது. சக பணியாளர்களுடன் மோதல்கள் ஏற்படலாம். அவர்களுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

இன்று உங்கள் துணையுடன் தேவையற்ற வாக்குவாதம் ஏற்படலாம். உங்கள் துணையை சமாதானப்படுத்தி நல்லுறவை ஏற்படுத்தி மகிழுங்கள்.

நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்காது. நிதி விஷயங்களில் கூடுதல் சுமைகள் காணப்படும். இது உங்களுக்கு சிறிது கவலை அளிக்கும்.

இன்று உங்களுக்கு பல் வலி மற்றும் கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. சாக்லேட் மற்றும் இனிப்பு வகைகளை தவிர்க்கவும்.




இன்று வாய்ப்புகள் அதிகம் கிடைக்கும் நாள். அனுசரித்து பேசும் அணுகுமுறை மூலம் இன்று செயல்களை எளிதாக மேற்கொள்ளலாம். இன்று உங்களிடம் தைரியம் நிறைந்து காணப்படும்.

நீங்கள் கொடுக்கப்பட்ட பணிகளை எளிதாக முடிப்பீர்கள். பணி சம்பந்தமான குறுகிய பயணம் மேற்கொள்ள நேரும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று நிதி வளர்ச்சி சீராக இருக்கும். உங்கள் பணத்தை சேமிப்பதன் மூலம் பணத்தை பாதுகாப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திடமாக காணப்படுவீர்கள்.




இன்று உங்கள் சௌகரியங்கள் மற்றும் மகிழ்ச்சியை அதிகரிக்கும் விருப்பங்கள் உங்களிடம் காணப்படும். சில முக்கிய முடிவுகளை எடுக்க நீங்கள் உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும்.

பணியிடத்தில் கூடுதல் பணிகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் பொறுப்புகளை கவனமாக மேற்கொள்ள வேண்டும்.

காதலில் அமைதியின்மை உணர்வை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் கருத்துக்களை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்ளத் தயங்குவீர்கள்.

வீடு கட்டுதல் அல்லது புனர் நிர்மாணம் செய்வதற்கு பணம் செலவு செய்ய நேரலாம். இதனால் கூடுதல் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இது பயனுள்ள முதலீடாக இருக்கும்.

இன்று நீங்கள் மிகவும் ஆரோக்கியமாக உணர்வீர்கள்.



# இலங்கையில் கடந்த ஆண்டு ஏழு ஆயிரம் பேர் கண்தானம்

நாடளாவிய ரீதியில் கடந்த ஆண்டில் மாத்திரம் 7,144 பேர் கண்தானம் செய்துள்ளனர் என இலங்கை கண்தான சங்கம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் கடந்த ஆண்டில், பார்வை குறைபாடுள்ள 3,163 வெளிநாட்டவர்களுக்கும் 1,475 உள்நாட்டவர்களுக்கும் தங்களால் கண்களை தானம் செய்ய முடிந்ததாக அந்த சங்கத்தின் தலைவர் சம்பத் டி சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாடளாவிய ரீதியில் இதுவரையான காலப் பகுதியில் 22 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தமது இறப்பிற்குப் பின்னர் கண்களை தானம் செய்வதற்குப் பதிவு செய்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.